முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 4-5-56 — வெள்ளி | ஒலி 5

வள்ளுவர் நகர்

திருச்சியிலே நகர் அமைக்கிறோம்; நமக்கென ஒரு நாடு அமைக்கப் போர் தொடுத்திருக்கும் நாம்! அந்தப் படைவீரர்கள் கூடுவதற்கு, புதிய பயிற்சிகள் பெறுவதற்கு நகர் அமைக்கிறோம்!

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு' என நாட்டுக்கு இலக்கணங் கூறிய நல்ல தமிழ் வள்ளுவனின் பெயரால் நகர் நிர்மாணிக்கப் படுகிறது!

ஒளி தொழுது ஏத்தும் உலகில் இளிவரின் வாழாத மானமுடையாராம் — மறவேந்தர் பரம்பரையாம்—திராவிட சமுதாயத்தினர், வாடிக்கிடக்கும் நாட்டிற்கு வளம் தர—வகைகாண—வழி வகுக்கக் கூடுகின்றனர் வள்ளுவர் நகரில்!

வற்றாத நதி பாயும் வளமிகு கனிமரச் சோலைகள்; வாழ்வளிக்கும் நெற்களஞ்சியங்கள்; தாழ்வகற்றித தரணியிலே புகழ்பாடிய தமிழரசரின் வீரத் தாழ்வாரங்கள் —மண்ணிலே பொன—மண்ணை முத்தமிடும் கடலிலே முத்து — இவையத்தனையும் திராவிடர் சொத்து என அறிவிக்கும் பதிற்றுப் பத்து! அஃதடங்கிய எட்டுத் தொகை! பத்துப் பாடல்! அந்த இலக்கியத்தின காவலர்கள் இலட்சியத்தின் உருவினராய் இன்பத் திராவிடம் எமது எனப் பண்பாடி; இன்னுயிர் போயினும் தென்னகம் மீட்போம் என்ற முரசெழுப்பி; தன்னுயிர் வெல்லமென எண்ணித் தரைமீது நடைப்பிணமாய்த் திரிந்தவர்க்கும் உணர்ச்சியேற்றிப் புது உயிரூட்டி; தீரர்கள் நகராம் திருச்சியிலே திராவிடர் நகர் காணப்போகிறார்கள்!

விழுப்புண் படாத நாளெல்லாம் வாழ்க்கையிலே வீணான நாட்கள் என எண்ணும் வீரர்கள் மரபு திராவிடர் மரபு! திருவள்ளுவன் காட்டும் தீரர்கள் மரபு! அந்த மரபினர் மாநாடு என்ற பெயரால் பாசறை அமைக்கின்றனர். நகர் என்ற பெயரால் நாடு காக்கும் கோட்டை எழுப்புகின்றனர், அறத்தை அகழாகக் கொண்டு!

புறம் காட்டியவன் கோழை என்ற புறங்கண்ட தமிழகத்துப் புலி நிகர் மாந்தர், எலி நிகர் ஜடங்களாய்த் திரிந்தது போதும்-கிலியொழித்துக் கிளம்புவோம் புவியறியப் போர் முரசு கொட்டுவோம்—நம் வயிறெரிய வளம் அழிக்கும் வடநாட்டான், பிற நாட்டான் என்பதை வையகத்துக்குணர்த்துவோம் — என வாள் சுழற்றி,சூள் உரைத்து வள்ளுவர் நகரிலே கூட இருக்கின்றனர்.

நெடுஞ்செழியன்

அன்றொரு நாள் ஆரியப்படை கடந்தான் நெடுஞ்செழியன் என நாவினிக்கப் பேசுகிறோம்—காதினிக்கக் கேட்கின்றோம் — விழியினிக்கப் படிக்கின்றோம் வீர வரலாற்றை!

அந்த வரலாறு புதிய உருப்பெற்று இதோ திராவிடத்திலே நடமாடுகிறது நாவலர் உருவிலே! நமது நெடுஞ்செழியன்உருவிலே!



அவரது தலைமையிலே ஆரியப்படை மட்டுமல்ல; அருமைத் திராவிடத்தை அடிமையாக்கும் தடை அனைத்தும் கடக்கத் தீர்மானித்து விட்டோம். திருக்குறள் இலக்கணம் தீட்டிக் காட்டும் தீந்தமிழ்த் தலைவன் அவன் எனத் திராவிடம் தேன் சிந்திப் பேசுகிறது. நான் முந்தி நீ முந்தி என அந்த நாவலரின் படையிலே வீரர்கள் குவிகின்றனர்.

"இதனை இதனால் இவன் முடிக்குமெனாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற குறள் மொழிப்படி கழகத்திற்குத் தலைவரான காளை! கட்டழகன். மொட்டவிழாப் பருவத்திலேயே மூச்செல்லாம் தமிழுக்கு—தமிழ் வாழும் மண்ணுக்கு என முழங்கிய சேரன்! பெருவீரன்! சொலல் வல்லன்! சோர்விலன்! அஞ்சான்! அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது எனப் புகழ்பெற்ற அரிமா நெஞ்சன்! தன் சொல்லை வெல்லுஞ்சொல் பிறிதோர் சொல் இல்லையென சொல்லாற்றும் சோழர் குடிப் பிறந்தான். தமிழ் வளர்ப்பதில் பாண்டியன்! தருக்கர் முடி நெறிப்பதில் இலங்கை வேந்தன்! இத்தகையோன் இத்தரையின் மீட்புக்குத் தலைவனாகி நிற்கின்றான். நிமிர்ந்து நோக்கும் இடமெல்லாம் 'நான் நெடுஞ்செழியன் படைவீரன்' என மார்தட்டும் மறவர்களைக் காண்கின்றான். அன்னோன் வள்ளுவர் நகர் மத்தியிலே பொனனான தமிழ் பேசி — கண்ணும் நம் தாயகத்தை விடுவிக்க வழியுரைப்பான். மொழிதனிலே இனிமை கண்டோம்-என்ற புகழ் உரைக்கும் போதையிலே கிடக்காமல் புதிய பாதை கண்டோம்—போர் புரியும் முறையும் கண்டோம் — என தோள் தட்டி ஆடுகின்ற தோழர்கள் எல்லாம்-தோகை மயிலாட்டம் பின்னர்—நிலவு பின்னர்—தென்றல் பின்னர்—தென்னக விடுதலையே முன்னர் எனக் கரந்தூக்கிக் களம் நோக்கி எழுகின்ற காட்சிதனை நினைவாக்கிக் காட்டுகின்ற வள்ளுவர் நகர் விரைந்து செல்வோம் என அழைக்கின்றார் விடுதலைப் படைத் தளநாயகர் எல்லாம்!

இராசரத்தினம்

முத்தமிழின் பெருமை என்ன-மூவேந்தர் வளர்த்த தன்றோ—இயல் காணீர்—இசை கேளீர், கூத்தை ரசிப்பீர்—இவையெல்லாம் இன்று பிறர்க்கடிமை என்ற உணர்ச்சி பெறுவீர்-உறை விட்டு அறப்போர் வாளெடுப்பீர் என உரைக்கும் விதத்திலே வள்ளுவர் நகரிலே நமது பெருமைகள் விளக்கப்படும்.

தேனருவியோ — தென்றல் காற்றோ, ஆயன் குழலோ, நாயனந்தானோ—நாற்றிசையும் பெய்கின்ற இக்குளிர் மழைக்கு ஈடுண்டோ, இணையுண்டோ—இசையினிலே தமிழர்க்கு இத்தகைய பெருமையுமுண்டோ-என ஐயுறும் வண்ணம், திருவாவடுதுறை இராசரத்தினம் நாயன விருந்து அளிக்க இருக்கிறார். தமிழரின் கலையெல்லாம் தம் கலையாக்கிக் கொண்டு, தமிழருக்குப் பட்டமளிக்கும் தருக்கு கொண்டு, தலைத்திமிர் கொண்டு, 'சங்கீத அகாடமி' சாஸ்திரிகள் போல் இசையினிலே ஞானம் யாருக்குண்டு எனக் கேட்கும் 'அவாள்' வர்க்கத்தால் தொட முடியாத கலை, நெருங்க முடியாத துறை, திருவாவடுதுறையைத் தலைவராகக் கொண்டிருக்கும் நாயனப் பெருந்துறை! அந்தக் கலை வேந்தன், இசை மன்னன், சங்கீத சக்கரவர்த்தி, முழக்குகின்ற நாயனம் நம்மினத்தின் புகழ்காட்டும்! விடுதலையில் பெருநாட்டம் கொள்பவர்க்கு "பார் பார்! உன் பண்டைத் தமிழ் இசைப் பெருமையை!" என்று படம் காட்டும்!

ஆரிய ஜடம் காட்டி — அருண்டேல் ருக்மணி நடம் காட்டி — தியாகய்யர் மடம் காட்டி—தமிழருக்கு இசையினிலே உரிமையில்லை யென்று அடம் காட்டும் அநியாயத்தை எதிர்ப்பதற்கு ஏற்ற இடம் காட்டும் போர்க் கொம்பாம் அந்தப் புலவர் தரும் நாயனம்!

என். எஸ். கே.

திரையினிலே நரைவிழுந்த கருத்துக்களைக் கரைபடிந்த எண்ணங்களை காட்டுதல் வேண்டாமென்று கர்ச்சித்த கலைக் கோமான் — கலைவாணர் — நிலை மாறிப் போய்விட்ட தென்னிலத்தை மீட்பதற்குக் கலைமாரிப் பொழிகின்ற தமிழ் வீரன் — தங்கம் குணத்தில் — அந்த நகைச்சுவை அரசர் தரும் நல்ல கருத்துக்கள் வள்ளுவர் நகர்தனிலே சூழ்ந்திருக்கும் வீரருக்குப் படைக்கலனகள் !

கிருஷ்ணன் எனும் பெயர் கேட்டாலே கிறுகிறுத்துச் செயலடங்கும் மூடக் கொள்கை — கலைத் துறையில்! திரைத் துறையில்!

கே. ஆர். ஆர்.

இவரொருவர் இருக்கின்றார்—இலட்சியத்தைக்கலையில் பாய்ச்ச; என எண்ணிப் பெருமைகொள்ளும் இந்நாடு! வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசும் வீணர்கள் கூட்டம் நடிப்புப் புலவரின் வெண்கலக் குரல் கேட்டு — வெல்லத் தமிழ் கேட்டு—எழுச்சி இசை கேட்டு—துடித்திடும் காட்சிதனை நாள்தோறும் பார்க்கின்றோம்; நமக்குள்ளே, பெருமை கொள்கின்றோம். கழகத்தின்

★ தொடர்ச்சி 4ம் பக்கம்

தென்னகத்து மேடைதோறும் வெற்றிமுரசு கொட்டி வரும்

★ கொள்கை விளக்க ஓவியம் !
★ கொஞ்சு தமிழ்க் காவியம் !!

★

மு. கருணாநிதி எழுதிய

: மணி மகுடம் :

நூல் வடிவில் மாநில மாநாட்டில் கிடைக்கும்

★

விவரங்கட்கு : முத்துவேல் பதிப்பகம், திருச்சி.

சென்னை 4--5--56 வெள்ளி

அன்னைக்கு அவமானம்!

மே தினம் பாட்டாளிகள் வீட்டுப் பண்டிகை என்று நினைக்கும் போது இந்த மண்ணிலே புழுவாக நெளியும் நம் உறவினர்களை மட்டு மல்ல, கடல் கடந்த நாடுகளில் நாயைப்போல உழைத்து, அன்னிய நாட்டுப் பெருந்தனக்காரர்களின் இரும்புப் பெட்டியை பெரிதாக்கும் பணியில் ஈடுபட்டு, ஈனஎறும்பினும் கீழாய் வாழ்வு நடத்தும் தோட்டத் தொழிலாளர்களையும் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்த வேண்டியவர்களாகிறோம்.

தோண்டினால் தங்கமுண்டு; பகைவர் தீண்டினால் சிங்கமாய்ச் சீறும் குணமுண்டு—என்று குன்றேறி கர்ஜனை புரிந்துவரும் தமிழர் சமுதாயம் — வாழ்ந்துகெட்ட குடும்பம் — விழியிலே பெருக்கெடுத் தோடும் நீருக்கு அணைபோட முடியாமல், அணைந்த தீபம்போல் தேம்பி அழுவதையே உடைமையாக்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

புலி, வில், கயலெனும் இலச்சினையை இமயத்தில் பொறித்து, இணையில்லை எமக்கு-என தடையிலா இன்பப்பெருக்கில் திளைத்திருந்த தமிழன் ஈழத்துக் காவலரை சிறைக்கோட்டத்திலே பூட்டி, அந்தக் கோமகனின் கொட்டம் அடக்கினான்.

இன்றோ அவ்வழி வந்தோர் கள்ளத் தோணியிலே எவ்வாறு இலங்கை ஏகலாம்-எனும் ஏக்கம் நிறைப் பார்வை சிந்தி, அலை கடலோரத்தில் அணிவகுத்து நிற்கிறார்கள்.

கடாரம் எனும் பர்மாவிலே படையை மோதி, வீணர்களல்ல நாங்கள்; வீரர்தம் பரம்பரை என்பதை குருதிச் சேற்றைக் குழைத்து ஈட்டி முனையால் எழுதிக் காட்டிய நமதருமைச் சோழனின் சொந்தக் காரர்கள், இன்று கடாரத்துப் பூமியிலே கதியற்ற நடைப் பிணங்களாய், சர்வ சக்தி பெற்றிருப்பதாகக் கருதப்படும் இந்திய அரசினரால் கைகழுவப் பட்டவர்களாய்-கழுமரத்தில் காவு கொடுக்கப் படுவதையும்; பொறுமையுடன் நோக்க வேண்டியவர்களாகிறோம்.

போர்க்காலத்திலே பர்மாவுக்கு சொத்துக்களின் அழிவு மூலம் ஏற்பட்ட நஷ்டம் 1:0 மில்லியன் பவுன்கள். இதில் தமிழர்களுக்கு உரிமையான பங்கு 73 மில்லியன் பவுன்கள்-

—இந்த மாபெரும் தொகைக்கான நஷ்டஈடோ இது வரை எந்தத் தமிழனுக்கும் தரப்பட்டதாகத் தெரியவில்லை.

"நாங்களும் தூதுக்குழுவை இங்கிலாந்திற்கும், பர்மாவிற்கும் அனுப்பி வைத்தோம்; ஆனால் இதுவரை ஆன பலன் எதுவுமில்லை" —என்று பகிரங்கமாகத் தோல்வியை ஒப்புக் கொள்ளுகிறார், டில்லி பாராளுமன்றத்தில் இந்தச் செய்தியை வெளியிட்ட உதவி அமைச்சர் சாதத் அலிகான்!

நஷ்டஈடு தரப்படவில்லை; வேறொரு பர்மா நாட்டுக்காரனுக்குக் கிடைத்திருக்கும் உடைமையின் ஒரு பகுதி, அந்த நாட்டின் வாழ்விலும் தாழ்விலும் சம்பந்தப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழனுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கேட்டுப்பெறும் சக்திகூட இல்லாமற் போய் விட்டது; கொல்லாமை விரதத்தைக் கருத்திலே கொண்டு, பஞ்சசீலம் தீட்டிடும் பண்டித சிரோன்மணிகள், அணு குண்டுகளின் பால் கொண்டிருக்கும் அக்கறையில் அரைப் பங்கைக் கூட உயிரோடு உலவிக் கொண்டிருக்கும் தமிழர்பால்-தென்னிலத்து மாந்தர்பால் காட்டியதாகத் தெரியவில்லை!

உடைமை பெற்று, அதைப் போர்க்காலத்தில் இழந்தவர் நிலைமை தான் இவ்வாறு என்றால், உடைமை என்னும் ஒரு பொருளை உயிர் உள்ளளவும் கண்டோமில்லை என்று உழைப்பை மூலதனமாகக் கொண்டு, முகாரி பாடியவாறே வாழ்நாளை நகர்த்திக் கொண்டிருக்கும் நாதியற்றவர்களையாவது இந்த ஆட்சி பீடம் கவனித்திருக்கிறதா? அதுவும் இல்லை.

பர்மாவிலே ஏழு லட்சம் பேர் இந்தியர் என்னும் 'லேபி'லுக்குள்ளே அடக்கம் செய்யப்பட்டு அவதிக்குள்ளானோர்களாக வசிக்கிறார்கள். அந்த எண்ணிக்கையில் பாதிக்குமேல் தமிழினத்தவர்தான் குறிப்பதாக இருக்கிறது. அந்த ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் கடாரம் சென்றோர் கவலையை அனைத்தபடி காலம் கடத்தித் தீர வேண்டிய நிலைமையும் உருவாகி யிருக்கிறது.

நெஞ்சிலே ஈரமில்லாதார்; திராவிட இன உணர்ச்சியைப் பிஞ்சிலேயே அழித்து விடப்பார்க்கும் பாதகக் கூட்டத்தார், என்ற வாசகங்களுக்கெல்லாம் உரிமை கொள்ளும் வடநாட்டு ஆட்சிபீடம் தான் அசைந்து கொடுக்கவில்லை என்றால், இங்குள்ள பச்சைத்தமிழர் துரைத்தனமும்-இச்சையடக்கிய முனிவனைப்போல பாராமுகம் காட்டுவதுதான் நம் கருத்தை நோகச் செய்கிறது.

சிந்தியா கப்பல் கம்பெனி என்னும் பெயருடைய ஸ்தாபனத்தினால் இயக்கி வரப் பட்ட கப்பல்கள், கடந்த பல வாரங்களுக்கு முன்பு தமிழ் நாட்டிலிருந்து நேரடியாக பர்மா நாட்டுடன் போக்கு வரத்து கொண்டிருந்தது. இதன் விளைவாக தாயகம் சென்று மீள வேண்டும் என்னும் மாளாத ஆசையை மனதிலே பூட்டி வைத்து புழுங்கிக் கொண்டிருந்த தமிழர்கள் பொருட் செலவும், காலவிரயமும் அதிகம் ஏற்படாமல்: பிறந்த பூமியுடனும், பிழைப்புதரும் பூமியுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். அந்தக் கப்பல் உறவு நிறுத்தப்பட்டது தமிழர் நெஞ்சந்தோறும் கனலைப் பெய்திருக்கிறது.

வீட்டையும் நாட்டையும் கண்டு, களிப்பெய்த நினைத்த தமிழர்கள் நேரடித் தொடர்பு அறுபட்ட காரணத்தால் மனம் நொந்து போயிருக்கின்றனர்.

இது குறித்து பர்மாவிலே நடைபெறும் தமிழ் செய்தித்தாளின் ஆசிரியர் குழுவைச்சேர்ந்த சிலர், முதலமைச்சர் காமராசரைப் பேட்டி கண்டார்களாம். அதற்கு அவர் தந்திருக்கும் ஆணவம் தோய்ந்த பதிலைப் பாருங்கள்.

"இதில் நான் எதையும் செய்வதற்கில்லை. இது மத்திய சர்க்காரைச் சேர்ந்த விஷயம். இதுபற்றி நீங்கள் அவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்."

கேள்வி: தாங்கள் சிபார்சு செய்தால் விரைவில் பலன் கிட்டுமே?

பதில்: நான் சிபாரசு செய்தால் மத்திய அரசாங்கத்தினர் என்னிடம் பணம் கேட்டு விடுவார்கள். பிறகு நான் என்ன செய்வது?

கேள்வி: அங்கு வாழ்வோரில் பெருமபான்மையோர் தமிழர் என்பதை முன்னிட்டாவது நீங்கள் இந்தக் காரியத்தை மேற்கொள்ளக் கூடாதா?

பதில்: தமிழர் என்கிற உணர்ச்சியை எனக்கு ஊட்டுவதில் பிரயோசனமில்லை. இது மத்திய சர்க்கார் விவகாரம். அங்கேயேபோய் ஆவன செய்து கொள்ளுங்கள். ரொம்பச் சிரமமாக இருந்தால் தமிழர்கள் பர்மாவிலேயே தங்கிவிடட்டுமே!

—காமராசர்தான் கூறியிருக்கிறார், இப்படி!

"வயிறு பசிக்கிறதா? புல்லைத் தின்று வாழுங்களேன், பாபாத்மாக்களே!"—என்று பிரெஞ்சு மக்களைப் பார்த்து புரட்சி வெடித்துக் கிளம்புவதற்கு முன்பு ஊளையிட்டானே பௌலன்; அந்த வாசகத்திலே நடமாடிய ஆணவத் திமிரையும், அதிகாரச் செருக்கையும் ஒருங்கே காட்டி, கண்மூடித் தனத்துக்குக் கைலாகு கொடுத்துச் சேர்த்து, அதை அப்படியே பதிலாகக் குழைத்துக் கொடுத்திருக்கிறார், காமராசர்!

ஆச்சாரியார் கூட இவ்வளவு நெஞ்சழுத்தத்துடன் கூறியிருக்க மாட்டார்; ஆனால் இந்தப் பச்சைத்தமிழரோ; பதை பதைப்பு சிறிதுமின்றிக் கூறுகிறார், தொல்லை இருந்தால் தமிழர்கள் பர்மாவிலேயே தங்கி விடட்டுமே என்று!

அது மட்டுமல்ல; தமிழனென்ற உணர்ச்சியை தனக்கு ஊட்டுவதால் பிரயோசனமில்லையாம—ஒரு தமிழன் கூறுகிறார் இப்படி!

காமராசருக்கு மனைவி இல்லை; மக்கள் இல்லை இப்படித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால் பெற்று வளர்த்து, பெயரிட்ட தாயார் ஒருவர் இருக்கிறாரே!

அந்தத் தமிழ்த்தாயிடமிருந்து தமிழ்ப்பால் குடித்துக் கொழுத்து வளர்ந்த காமராசர் சொல்லுகிறார், தமிழனென்ற உணர்ச்சியில்லா மரக்கட்டை நான், என்று!

ஐயகோ! நெஞ்சம் வேகிறது, பிள்ளைப் பருவத்தில் தமிழ்ப்பால் குடிக்க மறந்திருக்கிறார், தமிழர்களை ஆளப் புறப்பட்டிருக்கும் இந்த பச்சைத் தமிழர்!

தமிழ் அன்னைக்கே அவமானம்—தன் மகன் முதுகிலே காயம் தாங்கி இறந்தான் என்ற சேதி கேள்விப்பட்டு, அந்தக் கோழைக்குப் பாலூட்டிய என் தனங்களை அறுத்தெறிவேன், என்று வீர முரசு கொட்டிப் பறப்பட்ட தமிழகத்தின் தாய்க்குலத்துக்கே தாங்க முடியாத அவமானம்.

ஐய்யோ தமிழகமே! தமிழ்ப்பால் குடிக்காதவர்களும், தன்னிச்சையாய்த் திரியும் தருக்கர் மனம் படைத்தோரும்—உன்னை ஆள்வதற்குத் திரண்டிருக்கிறார்களே, என்று கண்ணீர் வடித்துக் கதறுவதைத் தவிர, உடனடியாக நம்மால் என்ன செய்ய முடியும்!

★

வள்ளுவர் நகருக்கு வாரீர் !

[தொடர்ச்சி]

கொள்கைதனைக் காப்பதற்கு களம் புகுந்து வாழ்வுதனைத் தரும் பாக எண்ணிவிட்ட கலையரசர். கழக நடிகர்க்குத் தலைவராவார். மூச்செல்லாம் கொள்கைக் கென்ற அவர் முழக்கம், வள்ளுவர் நகர் வந்திடும் வீரர்க்குப் போர்முரசம்!

எம். ஜி. ஆர்.

இப்படித்தான் இருந்திருப்பான் பழந்தமிழ் வீரன் என்று காட்டுகிற வாள் முழக்கம்! வடநாட்டுப் படையெடுப்பில் சேரன்பின் சென்றிட்ட வீரர்களில் இவர் போலப் பலர் இருந்ததால்தான், கனக விசயர் தலை கண்ணகி சிலைக்கேற்ற கல் தூக்கப் பயன் பட்டதென்ற பழைய நினைவுகளைப் புதுப்பித்து உணர்ச்சியேற்றும் புரட்சி வீரர்! 'சுமை தாங்கி'யாக இருக்கின்ற தமிழ் இனத்தை 'ஆசை நினைவு' கொள்ளச்செய்து —'இன்பக் கனவு' காணச் செய்யும் எழுச்சிப்பறை இவரது சொல்லும் நடிப்பும்! வள்ளுவர் நகருக்கு வருகின்ற வீரருக்கு புதியதோர் துடிப்பு–புரட்சி நடிகர் தரும் படிப்பு!

அந்த இருவர்

இளமை முதல் இயக்கத்தின் பிள்ளைகள். இலட்சியக் கிளைகள்! எம் கொடிபோட்டே நாடகத்தைத் துவங்குவோம் என்று இடியோசை முழக்குகின்ற இரட்டையர்! கண்காட்சி ஆயின் என்ன; அங்கும் எம் களக்காட்சி காண்பிக்கும் கொடிக் காட்சி உண்டென்று கொள்கைவழி நிற்கின்ற தங்கங்கள்! நடிகர் உலகம் நம் கையில் வர இருக்கிறதென்ற அறிவிப்புக்கு நான் தான் விடிவெள்ளி! என்று வந்திட்ட நாராயணசாமி. அண்ணாவின் முதல் அரவணைப்பில் வளர்ந்த வீரன். இன்னொருவன் இலட்சியக் காளை இராசேந்திரன்- இரணியனின் கொள்கை வெறி கொண்டோன். இலட்சியமன்றி வேறொன்றறியான். இவர்களிருவரும் வள்ளுவன நகரிலே வருகின்ற வீரருக்கு வெற்றி 'மணி மகுடம்' அணிவித்து, புரட்சிப் 'புது வெள்ளம்' பாய்ச்சுகின்ற பணிதனைப் புரிவர்! பட்டாளம் எதிர்பார்க்கும் பகுத்தறிவு வாள் தருவர்!

மற்றும்

அன்று முதல் இன்று வரை அறிவு மழைதான் எனது இசை மழை என அறை கூவல் விடுக்கின்ற தோழர் அன்பர் அனீபா! கற்கண்டு இசை கொட்டும் கஸ்தூரி–செந்தமிழ் ஒலித்துக் காட்டும் செல்வா.

எல்லாம்

பன்னெடு நாட்களுக்கு முன் பழந்தமிழர் பெற்றிருந்த கலைச் செல்வத்தை நினைவூட்டி அச்செல்வம், சுதந்திர திராவிடத்தின் நிரந்தரச் செல்வமாக அமைவதற்கான வழி துறைகள் வகுக்கப் பயன்படும் ஏற்பாடுகள், எழிலும் ஏற்றமும் பெற்று எமது நாட்டினர் என்றோ ஒரு நாள் வாழ்ந்தனர் என்ற பழம் பெருமையை மட்டும் பேசிக் கொண்டிராமல்-அந்தப் பெருமையை மீண்டும் பெற ஊக்கமளிக்கும் உணர்ச்சி மிக்க நிகழ்ச்சிகள். வள்ளுவர் நகரில் வழங்கப்படும் இந்த வடிவேல்கள் ஏந்திட வாலிபப்பட்டாளம் குவிந்திடும். இசையும் கூத்தும் இங்கணம் இதய பேரிகைகளாக அமைந்திட, இயலோ-இலட்சியமொலித்திடும் எக்காளமாக இருந்திடப் போகிறது, குறள் தந்தவன் பெயரால் அமைந்திடும் கொள்கைப் பட்டினத்தில்!

விடுதலைக் கிளர்ச்சிகள்

உலகம் இதுவரை கண்டிருக்கிற விடுதலைப் போராட்டம் பற்றிய தேசிய வரலாறுகள், திராவிட முன்னேற்ற கழகக் கண்ணோட்டத்திலே எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை செற்பொழிவு மூலம் பெறலாம். அல்ஜீரியா, மொராக்கோ போன்ற இடங்களிலும் நாக நாட்டிலும் விடுதலைப்பட்டாளத்தின் சேனதிபதிகள் ஊதிடும் சுதந்திரச் சங்கு வள்ளுவர் நகரிலே எதிரொலிக்கும். சின்னஞ்சிறு கடுகளைய தேசங்கள் எல்லாம் செங்குருதிசிந்தி தனியரசும்தனிக்கொடியும் பெற்றிருக்கும்போது...இருபுனலும் வாய்ந்த மலையும், வருபுனலும் வல் அரணும் உறுப்பாகப் பெற்ற திராவிடநாட்டு விடுதலை மாத்திரம் தொலைவிலே போவானேன்? என்ற கேள்வி வள்ளுவர் நகரிலே இதுவரையிலே இல்லாத புதிய வலிவோடு கிளம்பப் போகிறது.

உரிமைக் கிளர்ச்சிகள்

சமுதாயத் திலே–மதவாதிகளிடமிருந்தும், பொருளாதார ஆதிக்கக் காரர்களிட மிருந்தும் நாம் பெற வேண்டிய உரிமைகளுக்கான போராட்டம் நடத்த வேண்டிய முறை எத்தகையது என்பதை, பல்வேறு நாடுகளிலும் நடைபெற்று வெற்றி பெற்ற உரிமைக் கிளர்ச்சிகளை எடுத்துக் காட்டுவதின் மூலம் வள்ளுவர் நகர் பெருமையுறும்.

தமிழ் இலக்கியத்தில் அரசியற் கருத்துக்கள்

இந்த இனிப்பான தலைப்பிலே சிலப்பதிகாரங் காட்டுகிற அரசியல் நுணுக்கங்களும் - திருவள்ளுவர் இயற்றியுள்ள அரசுமுறை, அமைச்சு முறை, படை முறைகளும் விளக்கப்படும், இலக்கியம், விருந்தாக மட்டும் அமையாமல் அரசியல் விடுதலைக்கான மருந்தாகவும் பயன்படுத்தப்படும்.

தனிநாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்

பொருளாதாரம் பற்றிப்பேச ஏகபோக உரிமையுள்ளவர்கள் எம்மைத் தவிர வேறு யார் என வீராப்புடன் பேசும் தோழர்களுக்கு விரிவான தெளிவுரை — விடுதலை பெற்ற நாட்டிலே பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்ற விளக்கவுரை — வள்ளுவர் நகரில் கிடைக்கும்.

தொழிற் புரட்சி

உலகத்திலே தொழிற் புரட்சிக்கு வித்திட்ட நூற்றுண்டு எது? இயந்திர காலத்தின் துவக்கத்திலே தான் தொழிற் புரட்சிக்கான துவஜாரோகணம் செய்யப் பட்டது என்பது உண்மைதானு? தொழிற் புரட்சிகள் எங்கெங்கே வெற்றி பெற்றன — எங்கெங்கே தோல்வியைச் சுமந்தன; ஏன்?— இத்யாதி கேள்விகளுக்கு விடை தருவதற்கு வள்ளுவர் நகரம் தயார்! தயார்!!

மொழிப் பிரச்சினை

மொழிப் பற்று? மொழி வெறியா? இப்படி ஒரு பிரச்சினைக்கு நாட்டிலே இடம் அகப்பட்டிருக்கிறதல்லவா? அந்தப் பிரச்சினைபற்றிய தெளிவு வழங்கக் கூடிய ஆற்றல் பெற்றது—மொழிக்காக மூச்சிழந்த தியாகிகளைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம். வள்ளுவர் நகரம் வரும் வீரர்களுக்கு அதை அறியும் வாய்ப்பு உண்டு.

திராவிடத்தின் உலகத் தொடர்புகள்

சாவகம், புட்பகம், யவனம், கிரேக்கம்-ரோமாபுரி போன்ற அயல் நாடுகளிலேகூட, திராவிடம் தொடர்பு பெற்றிருந்தது என்பதையும், இனியும் அத்தகைய தொடர்பு பெறத்தான் விடுதலை முரசு கொட்டுகிறது என்பதையும் அன்றுமுதல் இன்றுவரை ஆதார பூர்வமாக அள்ளித்தரும் சொற்பொழிவு வள்ளுவர்நகர் அளிக்கும் தேவைமிக்க நிகழ்ச்சிகளிலே ஒன்று!

தாய்க்குல வரலாறு

மகன் எங்கே எனக் கேட்டவளிடம்-புலி போன இடமறியேன் புலி வாழ்ந்த இடமிதோ என வயிற்றைக் காட்டிய புறநானூற்றுத் தாய்களை இன்று தமிழகத்திலே அதிகமாக சந்திக்க முடிகிறதா? வேறு நாடுகளிலா? இந்த வேதனைமிக்க கேள்வி வள்ளுவர் நகரில் எழத்தான் செய்யும். அந்த வேதனையிலும் விடுதலை உணர்ச்சி பெறத்தக்க வேகம் புயலெனக் கிளம்பும்.

கலையில் கருத்துப் புரட்சி

கலை–கலைக்காகத்தான் எனக் கதைக்கும் பேரறிவாளர்களை எதிர்நிறுத்தி–பிற நாட்டிலே கலைத் துறையில் எழுந்த கருத்துப் புரட்சிகளை உதாரணத்திற் கழைத்து — தென்னகத்தில் நாம் கலைத் துறையில் ஆற்றியிருக்கிற பணியினை எடுத்தியம்பி. அதற்காகப் பட்டிருக்கும் பாடுகளை விளக்கிக் கூறி, அருமை அண்ணா அவர்கள் ஆரம்பித்த அந்தக் கலைத்துறை புரட்சியினால் ஏற்பட்ட ஏற்றம் குறித்தும் பாராட்டி—அந்தப் பணியைச் சிதைத்திடும் முயற்சியிலே சிலர் இறங்கியிருப்பது கண்டு அவர்களை எள்ளி நகையாடி—இன்னும் வேகமாக – இன்னும் புதுமையாக - கலைத்துறைப் புரட்சியில் ஈடுபடுமாறு உற்சாகப்படுத்த வள்ளுவர் நகர் வீரர்களை வழிமேல் விழி வைத்துப் பார்த்து நிற்கிறது.

வரலாற்றில் நாம்

நம்முடைய வரலாறு நச்சு நினைப்பினரால் – இச்சகம் பேசித் திரிவோரால் மறைக்கப்படினும்– நாமிருக்கிறோம்; அதனால் நமக்கொரு வரலாறு இருக்கிறது என அழிந்த ஏடுகளை அரங்கேற்றி அகிலத்தின் ஒரு அங்கமாகத் திராவிடத்தை இணைக்கப் பாடுபடுகிற நாம், வள்ளுவர் நகரிலே— நமது வரலாற்றிலே மறைக்கப் பட்ட இன்னும் பல உண்மைகளை அறிய இருக்கிறோம்.

மற்றும் புத்தர் நெறி, உலகைத் திருத்திய உத்தமர்கள், தொழிலாளர் பிரச்சனை, இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பம்– இது போன்ற படைக்கருவிகள் திருச்சியிலே கூட இருக்கிற தீரர்களுக்குத் தரப்பட விருக்கின்றன. திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னணி வீரர்கள் முழக்க இருக்கும் கொள்கைப் பறைகள் அவைகள்! அதுமட்டுமா?

அண்ணு

"கானமுயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது..." என அறிவுரை வழங்கி- வீரர்களை அணிவகுத்து நிறுத்தி- பொருள், கருவி, காலம், வினை இடனோடு ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல் புரியும் ஒளி விளக்காம்–அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் சிரித்த முகத்தை–செந்தமிழ்ப் பெருக்கை 'செருமுனைக்குச் செல்வோம் வாடா தம்பி!' என அழைக்கும் விதத்தை நேரிலே கண்டு–திராவிடத் தேரிலே இவரன்றோ நல்ல சாரதி எனக்கொண்டு பணியாற்ற– 'படை பலம், பக்கபலம் மிக்கவர் எமது அண்ணா பாரீர்!" என்று பாருக்கும், பாராளுவோருக்கும் உணர்த்திட உதவிடும் நகரம் வள்ளுவர் நகரம்! அண்ணா என்றோர்– தலைவராம்! ஆள் பெரிய குள்ளராம் எனக்கூறும் எதிரிகட்கு– "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்; உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து!" என்ற குறளை எடுத்து நீட்ட வள்ளுவர் நகரில் வந்து குவியும் வீரர் தயங்கார்! தி மு. கழக மெனும் தேருக்கு அவர்தான் அச்சாணி-கட்டாணி முத்தனைய எங்கள் தமிழ் காத்திடும் காவலன்-பட்டாளத் தம்பிகளின் பாசமிக்க அண்ணன். குடும்பத்தில் எத்தனைபேர் தாயுண்டா உயிரோடு? தந்தையிருக்கிறாரா? சகோதரர் எத்தனை? எனக்கேட்கும் நண்பரிடம், கூடப்பிறந்தவர் யாருமில்லை; ஆனாலும் கூடப்பிறந்தவர் கூட காட்டாத அன்பைக்காட்டும் என் அண்ணன் காஞ்புரத்தார் இருக்கின்றார்; அவர் இருக்க எனக்கேன் கவலை–தானுடா விடினும் தசையாடும் உறவு பெற்ற உடன் பிறப்பு அவர்! வள்ளுவர் நகர் தனிலே அந்த வணங்காமுடி மன்னவனின் வாழ்த்துண்டு நமக்கெல்லாம்! அவர் தரும் பயிற்சி பல உண்டு! பாலுண்டு தேனுண்டு தானுண்டு தன் வீடுண்டு எனப் படுத்திருக்கும் தமிழனையும் தட்டி எழுப்புகின்றதிறன் அவர்க்குண்டு! பூவார் சோலைப் புதுமயிலே! கூவாய் எந்தன் கோகிலமே! எனக் கெஞ்சி காதல் மிஞ்சி வாடும் பருவத்தினர் கூட 'போடா தம்பி போருக்கு' என அவர் கூறி விட்டால் போதும்; ஓடி வருவார் களத்திற்கு! அப்படி கட்டளையிடும் நிலையிலேயுள்ள தலைவர்! கழகத்திற்குக்கிடைத்த புதையல்! தேடக்கிடைக்காத திராவிடத்தின் சொத்து! நாவலர் போற்றும் நமது காவலர்! லட்சோப லட்சம் தம்பிமார்களின் இதய வீடுகளில் ஏக காலத்தில் குடியேறியிருக்கும் எங்கள் தமயன்! அவர் அழைக்கிறார்; வள்ளுவர் நகருக்கு வாரீர் வாரீர் என்று! அறிவுமணம் பெற்றிட! பெற்ற மணம் பிறந்த நாட்டுக்குப் பயன் தந்திட! செல்வோம் வள்ளுவர் நகருக்கு! வெல்வோம்! வென்ற பின் திரும்புதலே வீரர்க்கு

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

சந்திப்பு!

ஏ. கே. வில்வம்

மயிலைக் காளை பூட்டிய அழகான வில்வண்டி; அந்தக் காளையின் கழுத்திலே கட்டப்பட்டிருக்கும் சலங்கையின் ஜல், ஜல் என்ற ஒலி; காண்ட்ராக்டர் கருப்புச்சாமிக்கு தெரு முனையிலேயே 'பராக்' கூறிக்கொண்டு வரும்!

தலைக்கும் உடலுக்கும் வேறுபாடு தெரியாமல், கழுத்திலே சதை வளர்ந்து திண்டிலே சாய்ந்தபடி, வண்ணம் தீட்டப்பட்ட அந்த வண்டியிலே வீற்றிருப்பார் கருப்புச்சாமி!

வைரக் கடுக்கனும், சட்டையில்லாத அவர் உடம்பில் தவழும் பெத்தாபுரம் வெண்பட்டும், அவர் மார்பிலே தங்கமுலாம் பூசிக் காட்டும் பொதிகை மலைச் சந்தனமும், கருப்புச்சாமிக்கே உரித்தான தனி லட்சணங்கள் என்ருல் அது மிகையாகாது!

அவர் பெயரைச் சொன்னுல் அந்த வட்டாரத்திலே அழுத பிள்ளையும் வாய்மூடும் என்று சொல்லுவார்கள்! ஊரிலே அவ்வளவு செல்வாக்காம் அவருக்கு! அவர் கண்ணிலே பட்ட இளம் பெண்கள், 'கற்போடு' வாழ்வதும், பூனையின் வாயில் சிக்கிவிட்ட எலி உயிரோடு திரும்புவதும் ஒன்றுதான்; என்பது அந்த ஊர் விஷயம் தெரிந்த நபர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

காட்டூருக்கு புதிதாக மாற்றலாகி வரும், இருபத்திரண்டு ரூபாய் சம்பள போலீஸ்காரனில் இருந்து—பெரிய பெரிய உத்தியோகஸ்தர் வரை யாராலுைம், கருப்புச்சாமியின் கண்ணிலே படாமல் விலகி வாழ முடியாது. எந்த அதிகாரியானுலும் அவர் 'தயவை' விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம்ஏற்பட்டுவிடும், இல்லையேல் ஏற்படுத்தி விடுவார் கருப்புச்சாமி!

முதலிலே வலை வீசுவார்; 'ஆள்' மயங்காதவனுக இருந்தால், 'தூண்டில்' போடுவார்; அப்போதும்' அசைந்து கொடுக்கவில்லை யென்ருல், சாம – பேத – தான – தண்டம் என்ற அளவிற்கு 'திருவிளையாடல்'கள் வளர்ச்சி பெறும். கடைசிக் கட்டம், அதிகாரிக்குக் காரணமில்லாமலேயே ஒருநாள் 'இடமாற்றம்' ஏற்பட்டுவிடும்.

உட்கார்ந்த இடத்திலிருந்தபடியே இரண்டாம் நபருக்குத் தெரியாமல், இத்தனையும் செய்து முடிப்பார் கருப்புசாமி! அதிலே அவருக்கு நிறைய அனுபவம்!

இதன் காரணமாகத்தான் பெரிய இடத்தின் 'பொல்லாப்பு' நமக்கு ஏன்? என்ற பயத்தால் பொதுவாக அந்த வட்டாரத்து அதிகாரிகள் எல்லாருமே அவருக்கு முன்னுல் பெட்டிப்பாம்பாகி விடுவார்கள்!

கத்தரிக்காய், பச்சை மிளகாய் வியாபாரத்தில் ஆரம்பித்த அவரது வாழ்க்கை, இன்று பல லட்சங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் 'பெரிய' புள்ளியாகிற அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்ருல் அதில் 'அதிசயம்' இல்லாமலா இருக்கும்!

'அவன் வந்த வழி அது! என்பர் ஆத்திகர்கள்!' 'கடைந்தெடுத்த அயோக்கியன் ஏய்த்துப் பிழைக்கிருன்' என்பார்கள் பொது மக்கள்.

'ஊரை அடித்து உலையில் போட்டுக் கொண்டான் உன்மத்தன்' என்று வயிறெரிந்து கூறுவர், அவரால் ஏமாற்றப்பட்ட சாதாரணங்கள்!

"நாயாகப் பிறந்தாலும் ராசி இருக்கணும்பா; ஒண்ணு சொறி பிடிச்சி குப்பையில புரளுது—ஒண்ணு 'மனுஷஞ' பொறந்தவனுங்களைப் பார்த்து சிரிச்சிகிட்டு, 'பியூக்' கார்ல பவனி வருது! இதுதான் உலகம்!"

இப்படிப் பல கோணத்தின் ஏக கதா நாயகராக இருந்து வந்த கருப்புசாமியை நம்பித்தான் பார்வதியை ஒப்படைத்து விட்டு மண்டையைக் கீழே போட்டார் மகாதேவ முதலியார்.

மகாதேவன், கருப்புசாமியின் உடன் பிறந்த அண்ணன், தன்னைத் தவிர வேறு கதியில்லை என்ற நிலையில், தன் ஒரே மகள், இளம் விதவை பார்வதியை தம்பி கருப்புசாமியிடம் ஒப்படைக்கும்போது மரண மூச்சு விட்ட படியே, 'தம்பி, பார்வதி திக்கற்றவள், இனி நீதான் அவளுக்குத் தாய்—தந்தை யெல்லாம்! இதை மட்டும் நீ என்றும் மறந்து விடாதே! அவளைக் கடைசி வரை காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்புதான் கருப்புசாமி!" என்று கண் கலங்கக் கூறியபோது—

'காப்பாற்றுகிறேன் அண்ணு! பார்வதி இனி என் மகள். அவளுக்கு ஒரு குறைவும் வராது' என்று கூறிய காட்சி சகோதரப் பாசத்திற்கே ஒரு சான்ருக அமைந்தது!

பார்வதி இளம் விதவை; விதவைக் கோலம், பூவையும்—மஞ்சளையும் அழித்துவிட்டதே தவிர. அவள் பொன்னுடலை, பொங்கும் பேரெழிலைப் பறித்துவிடவில்லை. வெட்டாத வைரக் கல்லாக, கைநகம் கிள்ளாத பசுந்தளிராக, செக்கர் வானத்தின் சிவப்பையெல்லாம் சிங்கார இதழ்களில் தேக்கி, எழில்காட்டும் சிவப்பு ரோஜாபோல அவ்வளவு அழகாக இருந்தாள் குண்டு முகம்! நிலாத் துண்டு நெற்றி! கெண்டை துள்ளும் காவியவிழிகள் அழகு கோவிலின் தலைவாயில்போல பருவம் தந்த பேரெழிலை சுமந்துகொண்டு உலவினுள் பார்வதி!

கூனிப் பழுதடைந்திருந்த குடிசையில், கிழிந்து அழுக்கேறிக் கிடந்த கோரைப்பாயில், பூனைபோல் உடல் சுருட்டிக்கொண்டு படுத்துக் கிடக்கும் பார்வதி; இன்று, நிலவு பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்தில் தங்க விக்ரகம்போல் உலவிக் கொண்டிருப்பாள் என்று—அவளே கூட எதிர்பார்த்திருக்க மாட்டாள்!

"சிற்றப்பனின் கருணை, ஆயிரம் தான் வாழ்ந்தாலும்—அரச போகத்தில் புரண்டாலும், ரத்தபாசம் சும்மாயிருக்குமா? தானுடாவிட்டாலும் தன் சதையாடாமல் இருக்குமா? அதனுல்தான் கருப்புச்சாமி தன்னை சொந்த மகளைப்போல் காத்து வளர்க்கிருர் — கருணை வள்ளல்...! இப்படியெல்லாம் எண்ணிப் பெருமிதம் கொண்டாள் பார்வதி! இந்த இன்ப நினைவால் அவள் நெஞ்சத்தில் குமுறிக்கொண்டிருந்த பழைய சோக சம்பவங்களை யெல்லாம் மறந்து வந்தாள்.

எழில்காட்டி, இரண்டொரு வினாடிகளில் இருட்திரையில் விழுந்து விட்ட நிலவைப்போல், பருவம் அருமை காட்டியபோது, கரும்பு [illegible] சவலை போக்கும் மாமருந்தை—கட்டித் தழுவி கன்னங்களில் முத்தமிட்டு, "வாழ்வின் இறுதிவரை வையகமே எதிர்த்தாலும் என் உயிரே! நீயின்றி நான் ஏது!" என்றுகூறி தன் இதய மாளிகையின் ஒளி விளக்காய், சோழன் குலக்கொடிக்கோர் அம்பிகாபதி போல தனக்குக் கிடைத்த அன்புக் காதலன் சிவம் — இன்று எங்கே இருக்கிருன்? உலகின் எந்த மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கிருனே? அவன் இதயத்தின் எங்காவது ஒரு மூலையிலாவது தன் நினைவு கனவுக் காட்சி போலாவது இருக்குமா? சீ! சீ! ஏன் இந்த வீணுசை! உடைந்துபோன வீணை மீண்டும் ஒன்ருகவா சேரப் போகிறது? பார்வதியின் நெஞ்சங்களில் உணர்ச்சி யலைகள் மோதின. அவள் இதய வெப்பம் ஆவியாகி, நீலக் கருவிழிகளில் மோதி குளிர்ச்சி பெற்று, கண்ணீர்த் துளிகளாக அரும்பு விட்டன. "எல்லாம் நிராசை; வாழ்க்கையே ஒரு சூன்ய வெளியாகி விட்டது"—என்று முணுமுணுத்தாள் பார்வதி!

அதுகான் போகட்டும்; தன் சிந்தையிலே சித்திரம்போல் பதிந்து விட்ட சிவனை — அந்த கலையாத ஓவியத்தை — கோரக் கரங்களால் தூக்கி எறிந்துவிட்டு—தன் விருப்பத்திற்கு மாருக, நீலனை — முன்பின் தெரியாத அந்தப் புதிய மனிதனை—தன் இதயத்திலே கொண்டுவந்து திணித்தார்களே பாவிகள்! அந்த 'புதிய' சம்மந்தமாவது நிலைக்கக் கூடாதா? பொல்லாத காசம் அவர் பொன்னுடலை தின்று பசிதீர்த்துக் கொண்டதே! என்னைப் பெருமூச்சில் ஆழ்த்திவிட்டு நீலனைக் கொண்டுபோய்விட்டதே!

இப்படிப் பலப்பல நினைவலைகள், இளமைக் கனவுகள், சரிந்துபோன காதல் சாம்ராஜ்யங்கள்—பற்றியெல்லாம் அவள் நினைத்து நினைத்து பெருமூச்சு விட்டாள்.

தன் உள்ளக் குமுறலை யாரிடம் சொல்ல முடியும்? தன் பருவத் தவிப்பை — இதயத்தின் கொந்தளிப்பை — எவரிடம் சொல்லி ஆறுதல் பெறுவது? அவள் தலை சுற்றியது; தொண்டை கரகரத்தது; தலையணையில் முகம் புதைத்து விம்மினுள், பார்வதி!

★

கருப்புசாமியின் 'ஸ்தல புராணம்' மகத்துவம் பெற்றதற்கு காரணமே அவரிடமிருந்த அந்த மிடுக்கு! உரத்த குரல்—உருட்டு விழி; அவர் செய்யும் எந்த அக்கிரமத்தையும் ஏன் என்று கேட்பதற்கு எவருக்கும் துணிவு வராது' சற்று துணிந்தவன் எவனுவது வாய்த் துடுக்காக எதிர் குரல் எழுப்பிவிட்டால் — தொலைந்தான் அவன்! சில நாட்களில் அவன் தலையில் 'தென்னங் கன்று' முளைத்து விடும்! இந்த அச்சத்தின் காரணமாகத்தான் அவர் செய்கின்ற அட்டகாசத்திற்கெல்லாம் நாணலைப் போல—காட்டூர் மக்கள் என்ன? அந்த வட்டாரமே வளைந்து கொடுத்தது! பிறகு கேட்க வேண்டுமா?

மத்திய சர்க்கார் காண்ட்ராக்ட் வேலைகளிலிருந்து, சாதாரண பஞ்சாயத்து போர்டு சாக்கடை கட்டுகின்ற சிறிய தொழில்வரை—'டெண்டர்' எடுப்பார்! பெரியபெரிய சாலைகள்; அணைக்கட்டுகள்; ஏரிகள்; கிராமத்துக்கிணறுகள்; பள்ளிக் கூடம் போன்ற கட்டிடங்கள்—இத்தியாதி - இத்தியாதி! அவர்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்



பேஞ ஓவியம்

(10-ம் பக்கம்)

3

லேடி டாக்டர் ஆனந்தி கொஞ்ச வயதினள். இரண்டு மூன்று வருடங்களாகத்தான் அவள் வேத புரத்திலே மருத்துவ மனையைத் துவக்கித் தொழில் புரிந்து வருகிறாள் என்றாலும். அந்த வட்டாரத்திலே பெயர் பெற்ற லேடி டாக்டராக ஆகிவிட்டாள், ஆனந்தியின் தொழில் திறமையை விட பழகும் தன்மை பலரையும் கவரக்கூடியது. பருவமும் அத்தகையது. உருவமும் அதற்கு ஒத்துழைக்கக் கூடியதுதான். பெயருக்கேற்ப ஆனந்தமாகவே எப்போதும் காணப்படுவாள். நோயாளிகள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் நேரத்திலே கூட அவர்களுக்குத் தன் புன்னகை மூலம் ஆறுதல் வழங்குவாள். எந்த நேரத்திலும் எப்படிப்பட்ட நிலைமையிலும் பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் வந்தால் அவர்களை அனுதாபத்தோடு கவனித்து ஆக வேண்டியவைகளைக் கவனிப்பதில் ஆனந்திக்கு நிகர் யாருமில்லை என்று ஊரே பாராட்டும். வியாதியால் துடிப்பவர்களிடம் வெகுண்டு பாயும் குணம் அவளிடத்தில் இல்லை. இது அவள் தொழிலுக்குத் தேவையான அரிச்சுவடிதானே என்று நினைக்கலாம். ஆனால் அந்தப் பாலர் பாடத்தை மறந்துவிட்டு எத்தனை பாதகர்கள் 'ஸ்டெதாஸ் கோப்பை' தூக்குக் கயிறுபோல தங்கள் கழுத்திலே தொங்க விட்டுக் கொண்டு, பாசக்கயிற்றோடு காட்சியளிக்கும் புராண காலத்து யமனைப் போல நோயாளிகளை உற்று நோக்குகிறார்கள்! உறுமிப் பாய்கிறார்கள்!! அப்பப்பா அந்த உத்தமர்கள் உலவும் மருத்துவ உலகத்திலே தான் சில சமயம் அப்பாவி நோயாளிகள் சிககிக் கொண்டு உயிரைவிட முடியாமல் திணறிச் செத்தக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் ஆனந்தி கானல் நீரைப் போலக் காட்சியளித்ததில் வியப்பெதுவும்இல்லைதான்! நோயாளிகளைக் குணப்படுத்துவதில் மருந்துக்கு அடுத்த படியான இடத்தை மருத்துவனின் இன்முகந்தான் பெறுகிறது. இந்த உண்மையை ஆனந்தி உணர்ந்திருந்ததோடு மட்டுமல்ல; அது போலவே உழைத்திடவும் அக்கறை எடுத்தக் கொண்டாள். அதனால் அவள் பெயர் வேதபுரதது வட்டாரத்திலே செல்வாக்கோடு மின்னிக் கொண்டிருந்தது. மருத்துவமனைக்கு வரும் கிழவிகள், ஆனந்திக்குப் பாட்டி முறை ஆகி விடுவார்கள். நடுத்தர வயதினர் அம்மா என்ற அன்பழைப்புக்கு ஆளாவார்கள். சம வயதினர் சகோதரிகள் என்ற உறவு முறையால் பிணைக்கப்படுவார்கள். அவள் உள்ளத்திலே அப்படி எண்ணுகிறாளோ—அல்லது வைத்தியத தொழிலின் வளர்ச்சிக்காக அந்த முறையைக் கையாளுகிறாளோ — அதுபற்றி காய்சசல்காரர்களுக்கு என்ன கவலை! அவர்களுக்குத் தேவையானது உடல் நலம்! அதனால் ஆனந்தியின் உள்ளத்திலே புகுந்து ஆராய்ச்சிநடத்த அவளது வாடிககை நோயாளிகளும் சரி—புதிய வரவுகளும் சரி—அக்கறை எடுத்துக் கொண்டதில்லை. ஊரிலே யாரும் எடுததுககொள்ளாத அந்த அக்கறையை டைகர் மட்டுமே எடுத்துக் கொண்டான். ஆனந்தியின் உள்ளம் எப்படிப்பட்டது என்ற கண்டுபிடிப்பிலே அவன செலவழித்த நாட்கள் பல! அவன் ஆனந்தியை அடிக்கடி சந்திக்கிற நிலைமைகளை உண்டாக்கிக் கொண்டான். நோயாளி அல்ல; ஆயினும் தன் நோய் தீர்க்கும் மாத்திரை அவளிடம் இருக்கிறதா என்பதை எப்படியாவது தெரிந்து கொள்ளத் துடித்தான். டைகர் — ஆனந்தியின வைத்தியசாலையைத் துவக்குவதற்காக வேதபுரத்திலே பட்டிருக்கிற கஷ்டங்கள் ஏராளம்.

ஆனந்தி, அந்த ஊரில் குடியேறித் தொழில் நடத்த விரும்பியபோது—அவளது அண்ணன், தங்கைக்குத் தக்கது செய்து உதவ வேண்டுமென்று வேதபுரத்திலேயுள்ள தன் பாலய நண்பன் ஒருவனுக்குத்தான் கடிதம் எழுதியிருந்தான். அந்த நண்பன் தான டைகர்! தோழனின் வேண்டுகோளை அலட்சியம் செய்யாமல்—ஆனந்தியின மருத்துவமனை ஆரம்பிப்பதற்கான காரியங்கள் அத்தனையும் பார்த்துக் கொடுத்தான், ஊரிலே செல்வாக்குள்ள மைனர். வீட்டுக்கோ செல்லப்பிள்ளை! கிராமங்களில் அவர்கள்தானே கிருஷ்ண பரமாத்வாகத் திரிய முடிகிறது! டைகரைச் சுற்றி எப்போதுமே ஒரு வாலிபப் பட்டாளம். அவன குடித்து மிச்சம் வைத்த டீயைக் குடிக்க! புகைத்து வீசியெறிந்த சிகரெட் துண்டைப் புகைக்க! மற்ற நேரங்களில் அவன் இட்ட வேலையைச் செய்து வயிறு வளர்க்க! இத்தகைய பட்டாளமொன்று பக்கபலமாக இருக்கும் போது டைகர் போன்றவர்கள் வேதபுரம் போன்ற ஊர்களிலே வீரர்களாக உலவ முடியாதா என்ன? டைகருக்கு இயற் பெயர் அதுவல்ல! பெற்றோர்கள் இட்ட பெயர்ராமகிருஷ்ணன் பரமஹம்சரிடத்திலே பக்திமிகுந்தவர் செத்துப்போன அவன அப்பா! அதனால் அவரது நினைவாக அப்பெயர் சூட்டினார். பரம சாதுவாக வளருவான் தன் மகன் என்று பறைசாற்றிக கொண்டிருந்தார். அவனோ டைகர் என்ற பட்டத்துக்குரியவனாக—வேதபுரத்து வீரனாக வளர்ந்துவிட்டான். ராமனுக்கு அருகிலே ஒரு குரங்குப் பட்டாளம் — இவனுக்கும் அப்படித்தான்! கிருஷ்ணனுக்கு பாவையர் பட்டாளம் தேவைப்பட்டது! இவனும் அந்நிலைக்கு உயர்ந்து கொணடிருநதான்.

எப்படியோ ஒரு விதத்தில் தந்தை வைத்த பெயர் அவனுக்குப் பொருத்தமாகவே அமைந்திருந்தது. ராமகிருஷ்ணன் டைகரானான். அந்த டைகரின் வேட்டையில் சிக்கிய இள மான்கள் ஏராளம். சிந்தாமணி, அவனுக்கு சொந்தக்காரி. மாமன் மகள். ஒரு உறவுக்கு! அவளைத் திருமணம் என்ற பெயரால் சுவைக்க வேண்டுமென்று திட்டமிட்டான் டைகர். சிந்தாமணியின் தந்தை டைகரின மிரட்டல்களுக்குப் பணியவில்லை மிஞ்சல்-கெஞ்சல் எதுவுமே அவரை அவன பக்கம் சாய்த்திட உதவவில்லை அவருக்குத் தெரியும் அவனது நடவடிக்கைகள் அனைத்தும்! ஊருக்கே தெரியும்—ஏன்; ஆனந்திக்குக் கூடத்தான் தெரியும்; டைகர் எப்படிப்பட்டவன என்று! டைகருக்கு மட்டுமே ஆனந்தி எப்படிப்பட்டவள் என்று தெரியாமல் இருந்தது. அந்த ரகசியத்தை வெளியிடத்தான போலும்; வேம்பு ஆனந்தி வீட்டுக்கு வேலைக்காரனாக வந்து சேர்ந்தான். ஊரார், கைதேர்நதவள்—கனிவு மிககவள் என்று பாராட்டுகிறார்கள். நோயாளிகளோ, அவள் தரும் மருந்தாலும், அதைவிட மேலான அன்புப் பணியாலும் நலிவு நீங்கி வாழ்த்துகின்றனா.

அத்தகையவள் தன் சொந்த வாழ்வைப் பொறுத்த வரையில் ஒரு சாதாரணப் பெண்ணைவிட மிகவும் கேவலமான நிலைமைக்கு ஆளாகி விட்டாள். அந்த நிலைமை அவளாகத் தேடிக் கொண்டதல்ல, தேடாமலே வந்தது! வந்த பிறகு அவளாலே விலக்க முடியாத விருப்பத்துக்குரிய நிலைமையாகவும் ஆகிவிட்டது! வேலைக்கார வேம்புவைத் தட்டிக் கொடுக்க ஆரம்பித்தான் டைகர்! வெண் புறு வேட்டைக்காராகளுககு வேம்பு போன்றவர்கள்தானே அம்புகள்! அந்த அம்பைக் கூரேற்றினான், இரண்டு நாள் தேநீர்! இரவு நேரங்களில் டைகரோடு ஊர்வலம்! அவ்வளவுதான் வேம்புஉண்மைகளைக் கக்க ஆரம்பித்தான.

ஆனந்தியின் குடும்ப விசாரணையில் ஆரம்பித்த பேச்சு, டைகரின குறிக்கோளின் எல்லைக் கோட்டை வந்து தொட்டு நின்றது. "ஆனந்தி துணிச்சல்காரிதானப்பா! தன்னந் தனியாக வாழ்க்கை நடத்துகிறாளே, கைகாரி!" என்று பாராட்டி வேம்புவின் வாயைக் கிண்டினான்.

"ஆமாம், அந்தக் குடும்பத்திலேயே ஆனந்தி அம்மாதான் தைரியசாலி! நல்லவுங்க! அவுங்க அண்ணன் ஒரு பயந்தாங் கொள்ளி. விளக்கு வச்சால் வெளியே கிளம்பமாட்டாரு! இத்தனைக்கும் அவரு "இடி முழக்கம்" அப்படிங்கிற பத்திரிகைக்கு ஆசிரியர்!" என்று டைகருக்கு வேண்டாத விஷயங்களை விவரித்துக் கொண்டிருந்த வேம்புவின் நாக்கை சிரமப்பட்டு வளைத்து நெளித்து. அதைச் சூடேற்ற-சிறிது சுவையான பானத்தையும் அளித்து டைகர். தன் பேச்சுத் திறமையைப் பயன்படுத்தி வெற்றி கண்டான்.

"இவ்வளவு கெட்டிக் காரியாயிருநதும் ஒரு நாள் ஏமாந்து போய்ட்டாங்க எங்கம்மா?"

"எப்படிடா வேம்பு-எப்படி?"

"அஞ்சாவது மைலிலே அய்யனூருன்னு ஒரு பெரிய பண்ணையிருககே தெரியுமா?"

"ஆமாம் தெரியும்! அந்தப் பண்ணைக்காரரைக்கூட எனக்குப்

பழக்கமாச்சே! பால கங்காதரத் தேவர்!''

''ஆங்...அந்தத் தேவர் வீட்டிலே ஒரு நாள் ராத்திரி" பிரசவம்னு...அவசரமா ஆள் ஓடிவந்தான்!''

''ஆனந்தியை அழைக்கவா?''

''ஆமாம்! அம்மாளும் உடனே என்னைக் கூட்டிக்கிட்டு, பண்ணையிலேயிருந்து வந்த காரிலே புறப்பட்டாங்க! நாங்க ரெண்டு பேருமா போய்ச் சேர்ந்தோம்!''

''எங்கே? பண்ணைவீட்டுக்சா?''

''ஆமாம், அப்படித்தான் சொன்னுங்க! நல்ல இருட்டு தெருவிலே மினுக்கு மினுக்குன்னு விளக்கு எரிஞ்சுகிட்டு இருந்தது! வாசல்ல போயி இறங்கினோம். உள்ளே பிரசவ வேதனையில் யாரோ சப்தம் போட்ட மாதிரி காதில் விழுந்துகிட்டே யிருந்தது' பண்ணைக்காரரு...அவருதான் தேவரு...அம்மாளை வாவேற்று உள்ளே அழைச்சிகிட்டு போனுரு! நான் மாத்திரம் வாசல்ல உட்கார்ந்திருந்தேன். எனக்கு ஒரு சந்தேகம்; '' என்னடா இவ்வளவு பெரிய மனுஷர். காரெல்லாம் வச்சிருக்கார், வீட்டு வாசல்ல ஒரு நாதியைக்கூடக் காணுேமே'' அப்படின்னு யோசிச்சேன் !''

'' உம், அப்புறம் ?''

'' அப்புறம் என்ன...ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தேன். உள்ளே சத்தத்தையே காணுேம்; பிரசவ வேதனை சப்தம் கேட்டதே; அதுவும் இல்லே !''

'' ஓகோ குழந்தை பிறந்துட்டதாக்கும் !''

'' அதான் இல்லே!...குழந்தை பெக்கிற ஆளே அங்கே இல்லேங்கிறது எனக்கு அப்பறந்தான் தெரிஞ்சுது !''

''என்ன - என்ன? விபரமாச் சொல்லு!''

''எனனடா-சப்தமே காணும்னு கதவுபக்கம் போனேன். கதவு உள்ளே தாள் போட்டிருந்தது! சரி; ஜன்னல் பக்கம் கவனிப்போம்னு பார்த்தேன் ஜன்னலெல்லாம் மூடியிருந்தது. காதைத் தீட்டிகிட்டு கேட்டேன். ஆனந்தியம்மாவோடா குரல் கேட்டது! ''அய்யோ பாவி! என்னை விடு! விடு!'' என்று சத்தம்! எனக்குப் பொறுக்க முடியவில்லே. புரிந்து கொண்டேன். பல நாளா வலை வீசி, இந்தப் பாலகங்காதரத் தேவர் இன்னைக்கு நினைச்சதை முடிச்சுட்டான் அப்படின்னு தெரிஞ்சு போச்சு எனக்கு ! ஓகோனனு கூச்சல் போட வாயைத் திறந்தேன். அவ்வளவுதான். வாயை எவனே கட்டினுன். காலு கையிலே கயிறை மாட்டினுன் எவனே? தாழ்வாரத்திலே உருட்டி விட்டானுங்க! காதை யாரும் மூடலே! உள்ளே என்ன நடக்குதுனனுகவனிச்சுகேட்டேன். கொஞ்ச நேரம் ஆனந்தியம்மாளுடைய ஆவேசமான குரல் கேட்டுகிட்டேயிருந்தது! அப்புறம்... சப்தமே இல்லே!...எனக்கு மயக்கம் வந்துடும் போல இருந்தது!... கதவு திறக்கப்பட்டது! என் கட்டுகளும் அவிழ்க்கப் பட்டன! டாக்டரம்மா சிலே மாதிரி அசையாம நின்னுங்க! அவுங்க முகத்திலே ... அய்யய்யோ ... சாவுக்களை படிந்து இருந்ததை நான்பார்த்து நடுங்கிப்போனேன். காரில் ஏறச் சொன்னுர் தேவர், ஏறிக் கொண்டோம். அவர் எங்களை வழியனுப்பி வைக்க கார் அருகில் வந்து நின்றுர். ''ஜாக்கிரதை! விஷயம் வெளியேசெரிந்தால் தலை போய் விடும் ஆமாம். டேய்! உனக்குத்தான் சொல்லுகிறேன் '' என்று என் தலையில் ஒரு குட்டு வைத்தார் கார் நகர ஆரம்பித்தது. எனக்கும் டிரைவருக்கும் நேராகவே டாக்டரம்மாவின் முகத்திலே தேவர் ஒருமுத்தமிட்டார்! பிணம்போல அம்மாள் இருந்தார்களே தவிர எந்த விதமான எதிர்ப்பேச்சும் கிடையாது !''

'' அதற்கப்புறம் அந்தத் தேவர்... வருவது போவது உண்டா ?...''

'' உண்டோ, என்னமோ, என் கண்ணில் படவில்லே. ஆனல், அம்மா என் காலில் விழுந்து, விஷயத்தை வெளியில் சொல்லாதே என்று கேட்டுக் கொண்டார்கள். நான் இப்போது உன் காலிலே விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேன் ; காதை சுத்தமாகக் கழுவிவிடு !''

டைகர் ஜெயித்து விட்டான். டாக்டர் ஆனந்தியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ரகசிய மொன்னறயே அறிந்து கொண்டு விட்டான் அந்த ரகசியத்தின் அடிப்படையிலேயே தன் ஆசைக் கோட்டையை எழுப்பி விடத் தீர்மானித்துப் புறப்பட்டான்

என்றும்போல் அன்றும் டைகரை ஆனந்தி வரவேற்றுள். எவ்வளவுதான் ஊரிலேஊதாரியாகத் திரிந்தாலும் தன்னைப் பொறுத்த வரையில் — தன் அண்ணனின் பால்ய சிநேகிதன் என்ற உணர்ச்சியோடு – இவ்வளவு உதவிகள் செய்கிறுனே என்ற எண்ணம் அவளுக்கு! அவளுக்கென்ன தெரியும்; வெள்ளாடுகளை-புள்ளி மான்களைக் கண்ட மாத்திரத்தில் பாய்ந்து விழுந்து பசியாற்றிக் கொள்ளும் வேங்கை—வெறியை அடக்கிக் கொண்டு, பசுவைப் பதம் பார்க்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கிற சங்கதி?

அதனுல், அவள் அவனை நம்பினுள். அவனிடத்திலே ஒரு பாசமும் வைத்தாள். அந்தப் பாசத்திற்கு எத்தகைய உறவுவர்ணமும் பூசவில்லேயே தவிர களங்கமற்ற பாசந்தான் அது!

என்றைக்குமில்லாத மாதிரியில் அன்று டைகர் சோகமாகக் காணப் பட்டதை ஆனந்தி வியப்போடு நோக்கி- ''ஏன் வாட்டம்?'' என்று கேட்டாள்.

டைகரின் குரல் நடுங்கியது. விம்மி விம்மி அழுதான்.

''ஏன், எதற்காக இப்படி ?... யாருக்காவது ... ஏதாவது ஆகிவிட்டதா ?'' என்று துடித்துக் கேட்டாள் ஆனந்தி !

'' யாருக்கும் எதுவும் ஆகவில்லே ! ஆனந்தி, உன் முகத்தைப் பார்ககவே எனக்கு பயமாயிருக்கிறது ... அய்யோ உன் எதிரே என்னுல் நிற்கவே முடியவில்லே !''

'' என்ன சொல்கிறீர்கள் ? என் முகம்பயங்கரமாக இருக்கிறதா?''

'' பறிககாத செந்தாமரைப் புஷ்பம் போல் இருந்த உன் முகத்திலே—எப்படித்தான் இவ்வளவு களங்கக் கீறல்கள் விழுந்ததோ தெரியவில்லே...பால் நிலவு உன் முகம் என்று பாராட்டித் திரிவேனே; அந்த நிலவு இப்படியா தேய்ந்து விடுவது ?''

''எனன? என்ன பேசுகிறீர்கள் ?''

''ஆனந்தி!இதைஇத்தனை நாள் என்னிடம் ஏன ஒளித்து வைத்தாய், மறுநாளே சொல்லி யிருந்தால், அந்த மடையனின்கழுத்தை அறுத்து பிணத்தை மிதக்க விட்டிருப்பேனே பேயன் ! பித்தன்!! பெண் இனத்தின் பெருமை உணராத அற்பன !!!''

'' நீஙகள் சொல்வது.........?''

'' பாலகங்காதரத் தேவனைப் பற்றிப் பேசுகிறேன் — பாவையுந்தன் கற்பைப் பாழ்படுத்திய பாவியைப் பற்றிப் பேசுகிறேன்!''

இந்த வார்ததைகள் காதிலே பட்டதும்ஆனந்திமூர்ச்சையுற்றுக் கீழேசாய்ந்தாள். கற்பு பறிபோனதைவிட — பறிபோன விஷயம் வெளியே தெரியும் போதுதான் அவமானத்தை தாங்க முடியாமல் அல்லாடுகிறுர்கள் சில பெண்கள் என்பதற்கு ஆனந்தி உதாரணமாகி விட்டாள்! அலறினுள்; பிரக்ஞை வந்த பிறகு! அழுது புலம்பினுள்!

டைகர்—நேரத்தை, சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

''கவலைப் படாதே! இந்த சேதி இனி என்னைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. பெண்ணொருத்தி தனியாக இருந்ததால் அல்லவா அந்தத் தேவனின திமிராட்டத்திற்கு இடங் கொடுத்துவிட்டது! இனி நானதான் உனக்கும் உன் கற்புக்கும் காவல்!'' எனக் கண்ணீர் விட்டபடி—தேம்பித் தேம்பி அழுதபடி—ஆனந்தியின் கரங்களை எடுத்துத்தன் கன்னங்களிலே பொத்திக் கொண்டான். ஆனந்தியை இபபோது தாட்சண்யம் வந்து அடிமையாக்கிக் கொண்டது.

தனக்காகக் கவலை எடுத்துக் கொள்ளக்கூடிய ஒருவன் இருக்கிறுனே என்று நினைத்துப் பெருமூச்சு விடத்தான் அவளால் முடிந்ததே தவிர அவளது தோள்களிலே தன் தலை சாய்க்கப் பட்டிருப்பதையும், அவளால் வேறுபாடாக உணர முடியவில்லே.

பஞ்சினும், பட்டுத் துணியினும் மிருதுவான அவள் நெஞ்சில் டைகர் போன்றவர்களின் முரட்டுப் பாதங்கள் பதிந்திட அவள் விரும்பத்தானில்லே ! என் செய்வது; முள்வேலி தேவைப்படுகிறதே ; முல்லைக் கொல்லைக்கு !

அவ்விதமானுள் ஆனந்தி ! முல்லைத்தோட்டம் அவள்! அதில் தேவர் போன்ற முரட்டு மாடுகள் நுழையக்கூடாதாம்—முள் வேலியாக இருக்கிறேன் என்றுன் டைகர் ! மானுக்கு புலி—காவலாயிற்று ! மாற்ற இயலாத சூழ்நிலை—மனதை சூழ் நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டாள் அந்த மங்கை !

பருவத்தைக் கொத்திச் சாப்பிட்டு சித்ரவதை செய்ய, பாலகங்காதரன் போன்ற கழுகுகள் இன்னும் எத்தனை பறக்குமோ; அவைகளின் பயங்கர நகரங்களிலேயிருந்து தப்ப-பாதுகாப்பாக ஒரு பகவதியின் பலி பீடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. நியாயமே என எண்ணியது ஆனந்தி யெனும் அந்த ஆடு !

வேம்பு மூலம் கிடைத்த கரும்பு இதுவெனக் கொண்டு டைகர் மகிழ்ந்தான் ! தொழில் முறைக்கு ஊனம் வந்து விடக்கூடதே என்று சற்று ரகசியமாகவே அவனது தொடர்பை வைத்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி ! பலாத்காரமாக கற்பழிக்கப்படுவது பாப விமோசனத்திற்கு உரியதுதான்—பிராயச்சித்தம் செய்திட ஏற்றதுதான் என ஆறுதல் கூறுவான் அவன் ஆனந்திக்கு ! அவளும் மகிழ்வாள். இருவருமே வாழ்க்கை ஜோடிகள் ஆகி விட்டால் என்ன என்று நினைப்பாள், ஜாடையாகச் சொல்லுவாள். '' காலத்தை எதிர் நோக்கி யிருக்கிறேன்- உன்னைப் பற்றித் தெரிந்தவர்கள் இந்த உலகத்தில் மூன்றுபேர் இருக்கிறுர்கள்; ஒருவன் தேவர் ! மற்றொருவன் அவன் கார் டிரைவர் ! மூன்றுவது ஆள் வேம்பு ! இந்த மூவரையும் ஒழித்து விட்டால் ஆனந்தியின் களங்கம் பற்றிப் பேசஆளே கிடையாது உலகில் ! அதற்கப்புறம் திருமணம் '' என்பான் டைகர் ! ஆனந்திக்கு அந்த வாதம் பிடிக்காதுதான். ஆனுலும் பொறுத்துக் கொள்வாள். அவனையும் விட்டு விட்டு எப்படி வாழ்வது ? உயிர்மேல் ஆசை உள்ளவர்கள் முருங்கைக் கொம்பானுலும் பிடித்துக் கொண்டு கரையேறத் தானே முயற்சிக்கிறுர்கள். அந்த ரகம் தான் ஆனந்தி!

அவளது மருத்துவ மனைக்குத் தான் சிந்தாமணி கொண்டு செல்லப் பட்டாள். சிந்தாமணியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக உணர்ந்தாள் ஆனந்தி. அவசரமாகவும் அவசியமாகவும் செய்ய வேண்டிய சிகிச்சைகள் அனைத்தும் செய்து, பிழைத்து விடுவாள் என்ற தைரியத்தை அவளது பெற்றோர்களுக்கு அளித்து — சிந்தாமணி இரண்டு நாட்கள் மருத்துவ மனையில் தன் கண்காணிப்பில் ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது என்று கூறினுள்.

சிவநேசரும், சிவகாமியும் ஆனந்தியிடம் தங்கள் குமாரியை எப்படியாவது பூரண சௌக்யப் படுத்துமாறு மன்றுடிக் கேட்டுக் கொண்டு வீட்டுக்குத்திரும்பினர், மாப்பிள்ளை வீட்டார் குறித்த நேரத்தில் வந்து விடுவார்கள்—அவர்களை வரவேற்க வேண்டிய வேலை வேறு இருக்கிறது அவர்களுக்கு! படுக்கையில் கிடத்தப் பட்டிருக்கும் சிந்தாமணியிடம்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

★ மு. கருணாநிதி ★

சந்திப்பு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

'டெண்டர்' கேட்பதற்கு அதிகமாக போட்டி போட்டு கேட்பதற்கு வேறு காண்ட்ராக்டர்களுக்கு துணிவு வராது; எப்படி வரும்! இவர்தான் 'தென்னைங்கன்று' வைத்து விடுபவ ராயிற்றே; அந்த பயம் பாவம்!

'கருப்புச்சாமி காண்ட்ராக்டில் உருவான சாலை இது'-என்று பார்க்கும்போதே சொல்லிவிடலாம்; மவுண்ட்ரோடு நடைபாதையைப் போல புழுதி மேடாகக் காட்சி யளிக்கும்! வெறும் கப்பி யைப் போட்டு தட்டி வைத்திருப் பார்! கிணறு வெட்டுவார்-அதில் நீர் இருக்காது! ஏரி - இரண்டு மாதங்களில் கரை உடைப்பெடுத்து விடும்! யார் கேட்க முடியும்? பெரிய அதிகாரிகள் பெருமூச்சு விடுவதோடு சரி; அதற்குமேல் அந்தப் 'பெட்டிப்' பாம்புகளால் என்ன செய்ய முடியும்!

இப்படி காட்டூரின் ஏகச்சக்ராதி பதியாக இருந்த கருப்புசாமிக்கு தான் ஒரு வாரமாக காய்ச்சல்-உடம் பிலல்ல! உள்ளத்தில்! காரணம்?

★

பொன்னம்பலம்! அவனை நினைக் கும்போதுதான் காண்ட்ராட்டரின் நெஞ்சம் எரிமலையாகக்கொதித்தது! ஊரையே ஆட்டிப் படைத்த கருப் புச்சாமியின வலையிலே அந்த ஒருவன் மட்டும் விழவில்லை யென் ருல்-அவரால் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? புதிதாக அந்த ஊருக்கு மாற்றலாகிவந்த எஞ்ஜினி யர் பொன்னம்பலம் —கருப்புசசாமி யின் எந்த 'அஸ்திரத்திற்கும்' வளைந்து கொடுப்பவனுய் இல்லை; யோசித்தார்; அவர்சிந்தனை ஓயாமல் வேலை செய்து கொண்டிருந்தது! இரவு—பகல்-இப்படிப் பல நாட்கள்; அவர் நெஞ்சம் போர்க்களமாகி விட்டது. கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தார்; சரியோ? தவருே? எப்படி யும் அவனை சரிக்கட்ட வேண்டும்! உலகத்தில் எல்லோருமே நியாய அநியாயங்களை தேடிப் பிடித்தா காரியங்களில் இறங்குகிருர்கள்? தான் வாழ—எத்தனை உயிர்கள் வதைபட்டால் நமகென்ன? என்ற 'குணம்' படைத்த சமுதாயத்தில் கருப்புச்சாமியிடம் மட்டும நேர்மை எப்படி முளைவிடும்? சிந்தித்துதான் அவர் அந்த பயங்கர முடிவிற்கு வந்தார்!

'பாவி! இந்தப் பாதகத்தை செய்யத் துணியும் நீ வேறெதைச் செய்ய மாட்டாய்; கல்லினும் கொடிய நெஞ்சு படைத்தவனே— காட்டு மனிதா—உன் மனச்சாட்சி என்ன செத்தா விட்டது? வேண்டா மடா இந்த விஷ நினைப்பு—வேறு நாணயமான வழியைத் தேடு!' இப்படி ஆயிரம் முறை உள் மனம் கருப்புசாமியை அசசுறுத்தியது!

உலகில் தீயசக்திகள் தானே பொதுவாக வெற்றிபடைகின்றன. அதைப்போலவே கருப்புசாமியின் காட்டுகுணம்தான் வெற்றிபெற்றது!

வழக்கம் போல இந்த நாசகாரியத் தையும் சமுதாயம் பெரிய இடத்து விஷயம் என்று கூறி-திரையிட்டு விடுமோ என்னவோ? யார் கண் டது!

ஆயிரம்தான் அயோக்கியனுக இருந்தாலும் 'விருந்துக்கு' என்று வலியவந்து அழைக்கும் போது; எப்படி மறுத்துவிடுவது: ஏதோ பட் டும் படாமல் விலகி வேண்டுமானல் இருக்கலாம்; ஒரே அடியாக வெறுப்பை கக்கி-எலியும்-பூனையு மாக, அதுவும் அந்தஊரில் சில கால மாவது வாழவேண்டிய நிலையில் இருக்கும் பொன்னம்பலம்; எப்படி மாறிவிட முடியும்;

'நம் உறவு பேச்சளவோடு இருக் கட்டும்; எதற்கு இந்த வீண் உபசாரமெல்லாம்; நான் என்ன தர்மத்திற்கா உழைக்கிறேன், சர்க் காரிடமிருந்து 'சொளை' 'சொளை' யாக மாதம் முடியுமுன் எண்ணி வாங்குகிறேன்; வேண்டாம் எனக்கு இந்த விருந்தும் வரவேற்பும்'' இப்படி பலமுறை சொன்னுர் பொன்னம்பலம்:

கருப்புசாமி என்ன சாதரண மானவரா—அட்டைப் பிடியாக பிடித் தார்; எப்படியோ சரிகட்டிவிட்டார். அன்று எஞ்ஜினியர் பொன்னம்பலத் திற்கு கருபபுசாமியின் மாளிகை யிலே விருந்து!

''சத்தியகீர்த்திபோல் பேசினுனே பார் பார்; பல்லிளிப்பில் மயங்கி விட்டான்; எல்லாம் இவ்வளவுதான் சார்; கொஞ்ச நாளைக்கு வேஷம் போடும்!; செய்தியறிந்த ஊராரின் உரையாடல் இது!

விருந்திற்கான ஏற்பாடுகளெல் லாம் கருப்புசாமியின் மாளிகையில் அமர்க்களப் பட்டது; எஞ்ஜினியர் பொன்னம்பலம் 'ஆஸ்டினில் வந்து இறங்கினுர்; அவர் வீட்டுக்குள் காலடி வைப்பதற்குள்-கருப்பு சாமியே விரைந்து சென்று வரவேற் ருர்; பல்லெல்லாம் தெரிய காட்டி உபசரித்தார்; அதற்குள் அறை பக் கம் திரும்பி—'பார்வதி! பார்வதி' என்று அழைத்தார்; தன் மனைவி யைத்தான் அழைக்கிருர் என்று கருதிய பொன்னம்பலம்; கோட்டை கழற்றி அருகில் இருந்த ஸ்டாண்டில் மாட்டிவிட்டு மேஜைக்கு முன்னல் உட்கார்ந்தார்; மீண்டும் 'பார்வதி, பார்வதி' என்றழைத்தபடியே அறைக்குள் சென்ருர்; சில நிமிடங் கள் கழித்து வெளியே வந்த கருப்பு சாமி; 'எஞ்ஜினியர் சார்; ஒரு நிமி டம் உட்காருங்கள்; இதோ வாது விடுகிறேன்' என்று கூறி விசிறி மடிப்பை எடுத்து தோளில் போட் டுக்கொண்டு வெளியே சென்ருர்;

பொன்னம்பலத்திற்கு சந்தேகம் ஏற்பட்டது; என்ன நடக்குமோ? இந்த புலிக்குகையில் தெரியாமல் சிக்கிக்கொண்டோமே என்று திகைத்தார்; அடுத்த வினடி அவர் திகைப்பு வியப்பாக மாறி, ஆயிரம் கேள்விக்குறிகளை அவர் நெஞ்சத் திலே சதிராட விட்டது:

பார்வதி! எழிலோவியம் போல் அங்கே வந்து நின்ருள்; ஈரிரண்டு நான்கு பூக்கள்! ஒன்றை ஒன்று விழுங்கி விடுவதைப் போல உற்று நோக்கின: கண்ணிமைகள் படபடத் தன; ஆச்சரியத்தால் இருவர் விழி களும் விரிந்து விரிந்து சுருங்கின; இரண்டொரு வினடிகள் அங்கே அமைதி நிலவிற்று; 'பார்வதி!' என்று உணர்ச்சிப் பெருக்கெடுத்த குரலில் கூறியபடியே அவளை நெருங் கினுன் பொன்னம்பலம்; 'நீங்களா? ...அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை; கரைகாண முடியாத இன்பம் அவள் இதயத்தில் ஊற் றெடுத்தது; உணர்ச்சியலைகளின் கொந்தளிப்பால்; அவள் உயிர்வற் றிய சிலைபோல் நின்ருள்; மீண்டும் அவர்கள் உணர்வுபெற நெடுநேரம் பிடிக்கவில்லை; ஏதேதோ பேசினுர் கள்; பழைய கதையெல்லாம் அந்த இரண்டொரு நிமிடங்களில்! எல் லாம் 'நயன காவியமாக' பாடி முடித் துக்கொண்டார்கள்;

கருப்புசாமி திரும்பிவந்தார்; விருந்து முடிந்தது; பொன்னம்பலம் விடைபெற்றுக்கொண்டு புறப்படும் போது 'ஏனே' அவர் முகத்தில் குறும்புப் புன்னகை மிதந் தோடிற்று தெருவரை கூடவே சென்று எஞ்ஜினியரை வழியனுப்பி விட்டு வந்த கருப்புசாமி ''பார்வதி நான் சொன்னபடி நடந்து கொண் டாயா'' என்ருர்;

'ஆமாம் சித்தப்பா; ஆள் ரொம் பவும் அழுத்தக்காரனுய் இருக் கிருன்-'

'பிறகு......!' இது கருப்புசாமி;

'உம்...எல்லாம் சரியாகி விட்டது வழிக்கு வராமல் எங்கே ஓடி விடப் போகிருன்-இனி என் காலடியே கைலாசம்னு கிடக்கப் போருன்...? இப்படி கூறிவிட்டு 'மானங்கெட்ட ஜென்மம் சீ; நீயும் ஒருமனிதனு!'' என்று மனதிற்குள் சபித்துக்கொண் டாள்; அன்றிரவெல்லாம் அவள் தூங்கவே இல்லை; 'அந்த முடிவை'ப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந் தாள்; எப்பொழுது விடியும் என்று ஒவ்வொரு வினடியும் ஊசி முனை யில் நிற்பவளைப் போலத் துடித்துக் கிடந்தாள்,

★

பொழுது விடிந்தது! கருப்புசாமி யின் மாளிகையே அல்லோலகல் லோலப் பட்டது; எங்கு தேடியும் பார்வதி இல்லை; புதிதாக வந்த எஞ்ஜினியர் பொன்னம்பலமும் விடிவதற்கு முன் ஊரைவிட்டே போய்விட்டார் என்ற செய்தி கேட்டு தேள் கொட்டியவரைப் போலத் துடித்தார். 'ஏமாற்றி விட்டாளே—என் முகத்தில் கரி பூசி விட்டாளே கட்டுவிரியன்' என்று கூச்சல் போட்டார் கருப்பு சாமி!

மேஜையின் மீதிருந்த ஒரு கடிதம் அவர் கண்ணில் பட்டது.

'மகளுக்கு சமமான என்னையே விற்று வாழ நினைத்த மனித மிருகமே! சமுதாயத்தின் விஷப் பூச்சே! மனிதப் பண்புகளை சாக்க டையில் போட்டு மிதிப்பவனுக்குத் தான் 'பெரிய மனிதன்' என்ற பட்டமென்ருல்-அதைக் காரி உமிழ் கிறேன். என்னைத் தேடாதே-தேடினுலும் கிடைக்க மாட்டே னடா பாவி! செத்துவிட்டேன் என்று எண்ணுதே-என் காதலரு டன் சீரும் சிறப்புமாக வாழப் போகிறேன்! பிரிந்த எங்களை மீண்டும் ஒன்று சேர்த்து வைத் தாயே-அந்தமட்டில் - மானங்கெட்ட வனே! உனக்கு என் நன்றி.'' கடிதத்தை கசக்கி எரிந்தார்; கண் கலங்கினுர்; அவர் தலை சுற்றியது: மயக்கம் போட்டு சாய்ந்தார்; அவ ருக்கு எப்படித் தெரியும் பாவம்; பொன்னம்பலம்தான்; பார்வதியின் காதலன் - சிவம் என்ற திடுக்கிடும் செய்தி!

★

சென்னையிலிருந்து

மே 15-ம் தேதி முதல்

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின்

"தனி அரசு"

மாதமிரு முறையாக
வெளிவருகிறது.

விலை அணு 2
வருட சந்தா ரூ. 3

எல்லா இடங்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனை யாளர்கள் தேவை.

'தனி அரசு'
131, பிராட்வே, சென்னை-1.

வெளிவந்துவிட்டது!

பெரியார் இராமசாமி, நாவலர். சோமசுந்தர பாரதியார், அறிஞர் அண்ணு, சக்தி கிருஷ்ணசாமி, டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சு, கவிஞர் கண்ணதாசன, கருணனந்தம, ஆர். வெங்கட் ராஜலு, திருலோக சீதாராம், டாக்டர் தருமாம்பாள் அம்மை யாா, எஸ். முத்தையா, பி. பாலசுபபிரமணியம், அ. மு. பரம சிவானந்தம், மங்கையற்கரசி பி. ஏ., தி. சடகோபன, பி. ஆர். ரங்காச்சாரி, திருக்குறள முனுசாமி, க. அனபழகன் எம். ஏ., அலமேலு அபபதுரை, நாரண துரைககணணன, டி. ஷண முகம், எஸ். கே. பேபி கந்தசாமி, பனமொழிப புலவர் கா. அப் பாதுரை, நடிகமணி டி. வி. நாராயணசாமி, பி. ரங்காச்சாரி, ஆர். வேணுகோபால்சாமி, அரங்கணணல், பழனியாண்டி, ஏ. கோவிந்தசாமி, கே. ஜி. இராதாமணாளன, ரா. நாகபூஷ ணம், பி. ஏ., பூ. கணேசன, "பேசும படம்", என. வி. நட ராசன, டி. வேணுகோபால் ராவ், பி. சி. கணேசன், சி. பி, சிற்றரசு, சி. சுபரமணியம் ஆகியோரின கருத்துரைகள்.

"கலைஞர் கருணாநிதி"

★ மூவண்ண அட்டை
★ மு. க.வின் அழகிய புகைப் படங்கள்

விலை ரூ 1-0-0

இளங்கோ பதிப்பகம்,
11, நல்லத்தம்பி முதலி தெரு, சென்னை-5.

(Advt.)

மே நாள்—1886-ம் ஆண்டு மே திங்கள் சிகாகோ நகரத்து சிங்கம் நிகர் தொழிலாளிகள் தங்கள் இரத்தத்தை ஹே மார்க்கெட் மைதானத்திலே பன்னீராகத் தெளித்து, வரலாற்றிலே செதுக்கி வைத்த பொன்னுள்! பாட்டாளி வர்க்கம் விழிப்படைந்ததைச் சித்தரிக்கும் மேனுள்!

"பன்னிரண்டுமணி நேரம் இயந்திரத்தைப் போல பாடுபட மாட்டோம்; எட்டு மணி நேரம்தான் எங்களால் பணியாற்ற முடியும் என்று துந்துபி முழக்கி; வியர்வை சிறிதும் சிந்தாமல் தொப்பை நிரப்பி வாழும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய புனித நாள்!

மே மாதம் 4ம் நாள் ஹே மார்க்கெட் மைதானத்தில்கடல்போலத் திரண்டு எட்டு மணி நேர வேலைத் திட்டம் குறித்தும் பாட்டாளித் தோழர்களின் விழிகளிலே வேலைச் சொருகும் வேதனைச் செயலைக் குறித்தும், அமைதியாக-குழப்பத்துக்கு வழியேற்படாத வகையிலே பேசிக் கொண்டிருந்தனர், தொழிலாளிகள்!

அப்போது முதலாளிகள் நியமித்த கைக்கூலி ஒருவன், காவலுக்கு நின்ற போலீசாரின் மேல் வெடிகுண்டு ஒன்றை வீசி மறைந்து விட்டான்.

அவ்வளவுதான்! கூடியிருந்த தொழிலாளர்களின் மேல் தோட்டா மழையைப் பொழிய விட்டார்கள்.

புழுவைப் போலத் துடித்துத் துடித்துச்செத்தார்கள்,பாட்டாளி மக்கள்!

ஹே மார்க்கெட் மைதானம் மயானக் கரையாக மாற்றம் கொண்டது!

தலைமை தாங்கி நடத்தியவர்கள் அத்தனை பேரும், கைது செயயப்பட்டு, வழக்கு மன்றத்துக்கு ஏற்றப் பட்டார்கள்.

ஸ்பைன்ஸ் பார்சன்ஸ் என்னும் பத்திரிகாசிரியன்; அடால்ப் பிஷர் என்னும் அச்சுத் தொழிலாளி; எங்கல் என்னும் பத்திரிகைக் காரன்; லிங்—ஆகிய ஐவருக்கும் அநியாயமாகத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தக் கொடுங் கோன்மையைக் கண்டிப்பதற்காகக் கூடிய உலகத் தொழிலாளர் சம்மேளனம் 1890-ம் ஆண்டிலும் அதற்குப் பின்வரும் ஆண்டுகளிலும் மே முதல் நாளை தொழிலாளர் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று முடிவு செய்தது.

பாட்டாளி மக்களின் பாதுகாவலன் கார்ல் மார்க்சே இந்த தீர்மானத்தைக் குறித்துச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

அதன் தொடர்ச்சியாகத்தான் மே தினம் மேதினி எங்கும் கொண்டாடப்படுகிறது. இன்று!

ஹே மார்க்கெட் ஜோடனை வழக்கிலே மரண தண்டனை பெற்ற ஆல்பிரட் பார்சன்ஸ் என்னும் பத்திரிகாசிரியன் வழக்கு மன்றத்திலே கொடுத்திருக்கும் வாக்கு மூலம் இதோ கீழே தரப்பட்டிருக்கிறது:

நான் ஒரு தொழிலாளி; எனவே தான் கொடும் தண்டனையைப் பெற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கை ஓடத்தை வேறொரு திசையை நோக்கித் திருப்பியிருப்பேனேயானுல் இந்நேரம் சிகாகோ நகரின் நடுவிலே பூங்காவும், பணியாளர்களும் சூழ்ந்திருக்க,பட்டு மெத்தையிலே புரண்டபடி வாழ்க்கை நடத்தியிருப்பேன்.

ஆனுல் நான் அந்தத் திசையிலே என் பயணத்தைத் துவங்கவில்லை. தொழிலாளியாக வாழ்ந்தேன்; தொழிலாளர்களுக்காக வாழ்ந்தேன்—இதுதான் நான் செய்த மாபெரும் குற்றம். இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பிலே நான் அப்படி வாழ்ந்தது மாபெரும் குற்றமானுல் இந்த நீதி மன்றம் வழங்கிடும் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

ஆனுல் அதற்கு முன்பு உங்கள் கவனத்தை இந்த முதலாளித்துவ அமைப்பின் பால் கொஞ்சம் திருப்புங்கள். லாபத்தைக்குவிப்பதற்காகத்திணிக்கப்படும்ஒவ்வொரு இயந்திரமும் பாட்டாளி மக்களுக்குப் பரம வைரியாகவே முளைத்தெழுகிறது. ஒரே நாளில் ஒரே கொடியில் பல ஆயிரம் தொழிலாளிகளை வேலையினின்றும் விரட்டி, பட்டினிப் பேய்க்கு அவர்களை இரையாக்கி விடுகிறது. அங்ஙனம் வேலையின்றித் திரிவோர் பசிக் கொடுமை தாங்கமாட்டாது சகோதரத் தொழிலாளிகளைப் போட்டிக்காரர்களாக நினைத்துக் கொண்டு தங்கள் உழைப்பை விற்பதற்குப் போட்டியிடுகிருர்கள். அதன் விளைவாக ஊதியம் குறைகிறது; வேலை நேரம் அதிகரிக்கிறது. என்னைப்போன்ற பலர் தூக்கு மேடையிலே தொங்கவிடப்படுகின்றனர். சிறைச்சாலையிலே பூட்டப் படுகின்றனர். மேன்மையுள்ள கனவான்களே! அவர்களையெல்லாம் நீங்கள் தண்டிக்க வேண்டுமானுல் இன்னும் அதிகமான அளவில் சிறைச்சாலைகளைச் சிருஷ்டி செய்யுங்கள்; தொகை தொகையாய்த் தூக்கு மரங்களை நட்டு வையுங்கள். அவர்கள் வறுமை, பிணி, சாக்காடு என்னும் பாதையிலே பீடு நடை போட்டபடி உங்களைச் சந்திக்கப் புறப்பட்டிருக்கின்றனர்.

துரைகளே! நெருப்பின்றிப் புகை கிளம்பாது. பூவைக் கொண்டே செடி இத்தன்மையது என்று தீர்ப்பு வழங்கி விடலாம். சமதர்மம் கோரும் சோஷலிஸ்டுகள் இரு கண்களையும், காதுகளையும் எந்நேரமும் திறந்து வைத்திருக்கின்றனர். எனவே தான் அவர்கள் நாட்டில் நடக்கும் அநியாயங்களைப் பார்க்கின்றனர்; அந்தச் செய்திகளைப் பற்றி கேள்விப் படுகின்றனர்; சிந்தனை செய்கின்றனர்.

அவ்வளவு ஏன்? முதலாளித்துவ முறையின் கொடுமையை சின்னஞ் சிறு வியாபாரிகள், கடைக் காரர்கள், மத்திய வகுப்பினர் ஆகியோரின் நிலைமைகளை வைத்தே கணக்கிட்டுக் கொள்ளலாமே! சென்ற ஆண்டில் 11.000 சின்னஞ் சிறு வியாபாரிகள் இருந்தவிடம் தெரியாமல் அழிக்கப் பட்டிருக்கிருர்களாம்: அரசாங்க அறிக்கை கூறுகிறது. இப்படி!

அந்தப் பதினோராயிரம் பேர்களும் என்னவானுர்கள்? ஏன் அவர்களுக்கு அந்த கதி ஏற்பட்டது? நாட்டிலே செல்வம் வற்றி விட்டதா? பொருள் மறைந்து விட்டதா? இல்லை; கனவான்களே இல்லை! செல்வம் இடம் மாறியிருக்கிறது அந்தப் பதினோராயிரம் பேர்களை சிலர் பிடித்து வாயில் போட்டுக் கொண்டிருக்கிருர்கள் அந்தச் சிலர் யார்? முதலாளித்துவ முதலைகள் தான் அவர்கள்.

அவர்களால் விரட்டியடிக்கப் பட்ட மத்திய தர வகுப்பினர் தொழிலாளிகளின் நிலைக்குத் தாழ்த்தப் படுகின்றனர். வறுமைப் படுகுழியிலே வீழ்ந்துவிட்ட அவர்கள் வேலை தேடி தொழிற்சாலையை முற்றுகை போடுகின்றனர்.

பிறகு?

தொழிலாளிகளின் எண்ணிக்கை உயர்கிறது; போட்டி அதிகரிக்கிறது. மேலும் மேலும் இந்த முறையினுல் முதலாளிகள் என்னும் அந்தச் 'சிலர்' பணக் கொழுப்பு கொண்டவர்களாகிருர்கள். இதைத்தானே நாம் கண்டு வருகிறும். மேன்மையுள்ள கனவான்களே? இந்தக் கொடுமை மாற்றப்பட வேண்டாமா? இதற்கு நீங்கள் என்ன தான் பதில் சொல்லப் போகிறீர்கள்?

★ ★ ★ மேன்மையுள்ள கனவான்கள் இதற்குப் பதில் சொல்லவில்லை. ஆல்பர்ட் பார்சன்ஸ் என்னும் அந்தப் பாட்டாளித் தோழனின் தலையை தூக்குமேடையிலே கொய்து விட்டார்கள்! ●

★ 4-ம் பக்கத்தொடர்ச்சி

அழகு என விட்டுக் கொருவர் விடை பெற்றுப் புறப்படுவோம்-அண்ணு அமைத்து-நாவலர் தலைமையில் நடை போடும் படைவரிசையில் நமது பெயரையும் இணைத்துக்கொள்ள!

திராவிட சமுதாயமே! உன் காதிலே வள்ளுவர் நகரத்து அழைப்பு விழுகிறதா? கேள்! நன்றுகக்கேள் அந்த அன்பழைப்பு கீதத்தை!

அன்பழைப்பு

அன்பழைப்பா? அன்பில் அழைப்பா? எனக் கேட்கத் தோன்றுகிறதா? சிந்தை அணுவொவ்வொன்றும் இந்த நாட்டு விடுதலைக்கே எனச் செலவிடும் சிங்கம்-திருச்சி மாவட்டம் தந்த தங்கம்-பெரிய திருவிழிகள் கனிவு காட்டவும் கற்றவை-கண்டு கொட்டவும் தெரிந்தவை-என்பதைச் செயல் மூலம் அறிவிக்கும் செருமுனைத் தளபதி அன்பில் தர்மலிங்கம் அழைக்கிருர்; வரவேற்புத்தலைவர் என்ற முறையிலே! வாழ்ந்து கெட்ட இனம் வாழப் புறப்படவேண்டும் என்ற ஆசையிலே!

வள்ளுவர் நகரம் அமையுமிடம் திருச்சி நகரை அமைப்பவர்சுவியா தழைக்கும் சாம்பு-வானமாமலை!

பந்தயத் திடலிலே பகலவன் தலைகாட்ட முடியாதபடி பந்தல் அமைக்கிருர்கள். திருமாவளவன் வடவரிடம் போரிட்டுப் பரிசாகக் கொண்டு வந்தான் முத்துப்பந்தர் என்பர் பூம்புகார் படித்தவர்கள்! இதோ-சாம்பு அமைக்கும் பந்தல் வடவருடன் போர் தொடுக்கத் தென்னுட்டில் திருமாவளவர்களைத் தயாரிக்கும் சேறுப்பந்தல்! முத்துப் பந்தர் அல்லவோ என்பீர்! மாவீரன் மதுரை முத்தும்-பன்னை முத்தும் பணியாற்றும் காரணத்தால்—இன்னும் பல திராவிட முத்துக்கள் பாடுபடும் சூழ்நிலையால் முத்துப் பந்தர் என்னும் பொருந்துமாறே!

தானை அமைத்துத் தருக்கரிடம் போரிடும் தமிழர் பாசறையில் ஆளைப் படைக் கோர் அங்குசமாம் பராங்குசம்!

நேரம் உணர மணியென்ன என்று கேட்பர் திருச்சி செல்வோர் மணி எங்கே என்று கேட்பர்! அந்த மணி வள்ளுவர் நகருக்கோர் ஆராய்ச்சி மணியாக அமைந்திருக்கும் காட்சிதான் என்ன காட்சி!

திருச்சியிலே தீருக்குக் குறைவுண்டோ? திருவள்ளுவர் நகருக்கு அவரெல்லாம் கொடி மரங்கள்! கோட்டைச் சுவர்கள்! குத்தீட்டி! கொள்கைக் கலசம்!

அவரெல்லாம்-அவரோடுதி.மு.க. வீரரெல்லாம் சேர்ந்தமைத்த வள்ளுவர் நகர் வாயிலிலே வரவேற்பு காத்திருக்கும் வளமார் திராவிடத்தின் வாலிப வீரருக்கு! உன்னே—உடைவாள்-உரிமை முரசு—உணர்ச்சிக் கனலை அக்கினியும் காத்திருக்கும் அறப் போர் புரிதற்கு உறுதுணையாய்!

ஆந்துவர அயத்தம் செய்திடுவாய் அருந்தமிழ் வளர்த்த பாமபரையே! குறள் போற்றிய குலத்தவனே! அகமும் புறமும் கொண்டு, இகமும் பரமும் என்று அலைந்தவர்களை மடக்கி வென்ற மரபினனே!உன்னை இருகைபேர்த்தி வரவேற்கக் காத்திருக்கிறது வள்ளுவர் நகரத்து முகப்புவாயில்! வடநாட்டார் சோழனுக்குத் "தோரண வாயில்" அமைத்துத் தந்து வணங்கி நின்றுர் என்ற வரலாற்றை நினைவு படுத்தும் முகப்பு வாயில்! உள்ளே, சோழனது 'பட்டி மண்டபம்' போல் அமைந்திருக்கும் பகுத்தறிவு மண்டபம் — காவிரிப் பூம்பட்டினத்தை நினைவூட்டும் மேடை திண்ணை அழைக்கிறது! புறப்படு புலியே! புலியாண்ட தமிழா! சேலத்து சிங்கக் கிழவர் ஜி. பி. சோமசுந்தரம் திறந்துவைக்கும் வள்ளுவர் நகருக்கு வந்திடுவாய்! தென்னிலங்கை வேந்தனது வழி வந்த திராவிடனே! கடாரம் வென்றவனே! கங்கைக் கரை வாழ் மன்னர்களை பங்கப் படுத்திய மாவீரர் குலக் கொழுந்தே! புறப்படு! புறப்படு! மே-17, 18, 19, 20! அந்த நன்றுட்களை மறவாதே!

வாராய்-வாராய் என அழைக்கும் வள்ளுவர் நகர் பாராய்! பாராய்!

பேனோவியம்

பாதிரியின் பாதை !

தொடாதே; எட்டி நில்- என்று பழங் குட்டையைக் குழப்புகிற எட்டிக்காய் கொள்கையாம் சனாதனம் இங்கு மட்டுமல்ல; தென் ஆப்பிரிக்காவிலும் கையாளப் படுகிறது; கடைந்தெடுத்த நாகரிகக் காவலர் என்று கருதப்படும் வெள்ளையரால்!

பள்ளிகளில்; பிரயாணம் செய்கிற வாகனங்களில்; மருத்துவ மனைகளில் — இந்த இடங்களிலெல்லாம் அவர்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.

நாய்கள் நுழையும் இடங்களில் கருப்பர்கள் நுழைய முடியாத அளவுக்கு சட்டம் வளைக்கப்பட்டு, வேலியாக்கப் பட்டிருக்கிறது.

இது அநீதி; அக்கிரமம்— என்று கர்ஜனை எழுப்பியது ஒரு குரல்! அதுவும் ஒரு வெள்ளைக்காரன் குரல!

காந்தியார் தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்காகத் தூக்கிப்பிடித்த உரிமைக் கொடியை கருப்பர்களின் சார்பாக கல்நெஞ்சர்களை எதிர்த்து உயர்த்திப் பிடித்தது அந்த வெள்ளையன் கரங்கள்!

அரசியலை ஒரு லாபகரமானத் தொழிலாகக் கொண்டு, போராட்டங்களின் உதவியால் சொந்தத் தேரோடும் வீதத்தைப் பெருக்கிக் கொள்ளும் பித்துமனம் கொண்டவனல்ல அவன; சத்துள்ளதாயின் நமது கருத்தை சகமெங்கும் முழக்கு வேன்-எனச் சங்கம் முழக்கும் இலட்சிய வீரன்!

ஆமாம்; அடுல்ட்டன் என்னும் பெயர் கொண்ட அந்தத் தொண்டன் ஒரு பாதிரி!

சைப்ரஸ் தீவுகளிலே போர் முரசு கொட்டிவரும் மகாரியாஸ் பாதிரியாரைப் போல இவரும் ஒரு பாதிரி—மதமென்னும் சாக்கடையிலே உழன்றும் மக்களிடை-பேதம் களைவதையே கருத்தாகக் கொண்டு விட்ட கர்மவீரர் பட்டியலுக்கு ஒரு 'மாதிரி!' உதாரணம்!

'பந்தூ' என்று சொல்லப்படும் கருப்பர்கள் வெள்ளையர்களால் எவ்வளவு கொடுமைகளைத் தெரியுமா அனுபவிக்கிறார்கள்?

பாம்பும் நுழைவதற்கு நடுங்கும் சேரிகளதான் அவர்கள் உறைவிடம்! குதிரை லாயம் கூட கொஞ்சம் துப்புறவாக இருக்கும்; ஆனால் இந்தத் துர்ப்பாக்கிய கருப்பர்கள் வாழும் இடமோ கரையான் புற்றிலும் கேவலமானது.

அறுபது இலட்சம் ஆப்பிரிக்கர்கள் இந்த அவலநிலைமைகளினிடையேதான் உயிரை வளர்த்து வருகிறார்கள!

பாதிரியார் சொல்வது போல இந்த அறுபது லட்சம் மக்களிடையே இதுவரையில் ஏழு வக்கீல்களும் முப்பது டாக்டர்களும்தான் தோன்ற முடிந்தது என்றால் அவர்களுடைய பிற்போக்குத் தன்மையை என்னென்பது!

—இந்த அக்ரமங்களையெல்லாம் எதிர்த்துத்தான புயற் காற்றுச் சூறையைப் போல உரிமைக் குரல் கொடுத்தார் பாதரியார் அடுல்ட்டன்.

ஆதிக்கவாதிகள் சும்மாயிருப்பார்களா?

அவரை இங்கிலாந்துக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள்.

இப்போதும் அவர் அடங்கி விடவில்லை. மனித நாகரிகத்துக்கு ஏற்பட்டிருக்கும் களங்கம கழுவப்பட வேண்டுமானால், தென் ஆப்ரிக்காவில் நடைபெறும் தூய்மையற்ற செய்கைகள், துடைத்தெறியப் பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருக்கிறார் அவர்!

பாதிரியார் - மதகுரு - மாதா கோவிலுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டியவர் மனிதாபிமானத்தைக் காப்பாற்ற மார் தட்டிக் கிளம்பி யிருக்கிறார்.

இங்குள்ள 'குன்றக் குடிகள்' குறை மதியை ஒழித்து, நாடு காக்க, நசுக்கப் பட்டவர்களை மீட்க-பாதிரியின் பாதையில் பீடு நடை போடுவார்களா?

★

நன்றி.

'முரசொலி' இதழின் மூன்றாவதாண்டு துவக்கம் குறித்து மனமகிழ்வுடன் வாழ்த்துச் செய்தி அனுப்பிய நண்பர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

திராவிட முன்னேற்ற கழக 2-வது மாநில மாநாடு.

—திருச்சியில்—

மே 17, 18, 19, 20-ல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயதிடலில் அமைந்துள்ள

வள்ளுவர் நகரில்

நடைபெறும்

★

தலைவர்: இரா. நெடுஞ்செழியன்,

திறப்பாளர்:

ஜி. பி. சோமசுந்தரம்,

வரவேற்புக் குழுத் தலைவர்:

ஏ. பி. தருமலிங்கம்

★

கலை விருந்தளிப்போர்:

திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்

என். எஸ் கிருஷ்ணன்	கே. ஆர். ராமசாமி
எம். ஜி இராமச்சந்திரன்	நாகூர் அனிபா
எஸ் எஸ் இராஜேந்திரன்	ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	பி. எஸ். செல்வா

★

கருத்து விருந்தளிப்போர்:

அறிஞர் அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
கே ஏ. மதியழகன்	மு. கருணாநிதி
சி. பி.சிற்றரசு	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கண்ணதாசன்
க. அன்பழகன்	காஞ்சி கல்யாணசுந்தரம்
டி. கே. சீனிவாசன்	கா. அப்பாத்துரை
சத்தியவாணி முத்து	அரங்கண்ணல்
அருண்மொழி	எம். எஸ். இராமசாமி
ப. உ. சண்முகம்	ஏ. கோவிந்தசாமி
கி. மனோகரன்	தில்லை வில்லாளன்
இரா. சு. தங்கப்பழம்	அலமேலு அப்பாத்துரை
கே. கே. நீலமேகம்	அ பொன்னம்பலனார்
பி. ஆர் கோகுலகிருஷ்ணன்	கே. வி. கே. சாமி
ஆர் எஸ். பாண்டியன்	எம். பி. சுப்பிரமணியம்
அலிசேக் மன்சூர்	டி. கே. பொன்னுவேலு

○ ● ○

மாநாட்டுக் கட்டணம்:

நான்கு நாட்களுக்கும் சேர்த்து:	ஆண்.	பெண்.	தனித்தனி ஒவ்வொரு நாளும்:	ஆண்.	பெண்.
1-ம்பிரிவு ரூ.	10-0-0	10-0-0	1-ம்பிரிவு ரூ.	3-0-0	3—0—0
2-ம்பிரிவு ,,	5-0-0	2-8-0	2-ம்பிரிவு ,,	1-8-0	0-12—0
3-ம்பிரிவு ,,	3-0-0	1-8-0	3-ம்பிரிவு ,,	1-0-0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி கட்டணம் (நுழைவு உள்பட) ரூ. 5 0 0

பொதுக்குழு உறுப்பினரல்லாதார் வரவேற்புக் குழுக் கட்டணம்: 25 0 0

எம். எஸ். மணி, எஸ். முத்து
செயலாளர்கள்.

★ புரிகிறதா? ★

கண்ணைப் பறிக்கும் வண்ண மாளிகை — சுற்றிலும் சிங்காரத் தோட்டம் — எடுபிடி, ஏவலாள் ஏராளம்—இருந்துமென்ன; அந்த அழகுக் கோட்டைக்குள்ளே... ஏதோ ஒரு சூன்யம்! வெறிச்சோடிக் கிடக்கும் விசித்திரத் தோற்றம்!

அந்த மாளிகைக்குச் சொந்தக்காரர் பெருந் தனக்காரர்தான்; மனைவியோ அருங் குணவதிதான்—இருந்துமென்ன; அதோ, அந்தஅழகு மாளிகையில் பரவிக் கிடக்கும் சுடுகாட்டு அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு ஏக்கக் குரல்—விம்மல் ஒலி எழும்புகிறது!

உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தாள் அந்த வீட்டின் எஜமானி. எதிரே நீண்டு வளர்ந்திருந்த மரத்தின், வளைந்திருந்த கிளை ஒன்றில் அவள் கண்கள் பதிந்து கிடக்கின்றன. அங்கு அவள் எதைக் கண்டாள்? ஏன் இப்படிவிம்முகிறாள்?

எங்கேயோ பறந்தோடி தேடி எடுத்த 'இரை'யுடன் ஒரு குருவி—அதைத் தன் அலகினால் 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டே கொத்தித் தின்னும் குருவிக் குஞ்சு! இந்த குருவிக் கூட்டின் குடும்பக் காட்சிதான் அந்த அம்மாவை அழ வைத்ததா?

அவள் அழுதாள்! "செல்வம் இருந்தென்ன; செல்வன் இல்லையே சிந்தை மகிழ" என்று புலம்பினாள். அந்த இடத்தைவிட்டு ஓடினாள்.

மறுகணம், அமைதியிழந்து தவித்த அந்த அம்மாவை ஏற்றிக்கொண்டு, 'எங்கே கிடைக்கும் நிம்மதி?' என்று தேடப் புறப்பட்டதுபோல் அந்த மாளிகையிலிருந்து வெளியேறிப் பறந்தது ஒரு விலையுயர்ந்த மோட்டார் கார்!

அதே சமயம்...அந்த மாளிகைக்கு அப்பால், நெடுந் தொலைவிலே, வெள்ளம்போல் பாய்ந்து கொண்டிருந்த ஆற்றின் பாலம் ஒன்றிலே, இன்னுமொரு அழுகுரல் எழும்பியது—வேதனை கலந்த விம்மல் ஒலி கேட்டது!

...பெற்றவளின் மனம் இந்த பயங்கரத்திற்கு எப்படித்தான் துணிந்ததோ...

இங்கும் ஒரு அம்மாதான் அழுகிறாள்!

ஆனால் அந்த இரண்டு அழுகுரலுக்கும்தான் எத்தனை வேற்றுமை?

ஆற்றுப் பாலத்திலே ஏறிநின்றாள் அந்தத் தாய். அவளது முகத்திலே ஒரு பயங்கர அமைதி. தன் கைகளில் துவண்டு கிடந்த தன் அன்பு மகனைப் பார்த்தாள். பசிக் கொடுமையால் அழுது அழுது மாய்ந்த அவன், களைப்பால் அயர்ந்து கிடந்தான்.

"கண்ணே! என்னை மன்னித்து விடடா! பெற்றுப் பேணிபவளா இந்த 'பாவத்'திற்குத் துணிந்தாள் என்று எண்ணுகிறாயா? ஆமாமடா கண்ணே! நீ பசியால்—பசியின் கொடுமையால் சித்திரவதைப் பட்டு சாகப்போகிறாயா? கூடவே கூடாது! நான் எப்படி சகிப்பேன் அதை! அந்தக் கஷ்டமே உனக்கு இல்லாது செய்யப்போகிறாளடா உன் தாய்!.."

'ஓ' என்ற பேரிரைச்சலுடன் பாய்ந்து கொண்டிருந்தது ஆற்று வெள்ளம்!

"அதோ பாரடா அன்பு மகனே! 'வாடா என் கண்ணின் மணியே' என்று கூவி அழைக்கிறாள் உன்னை—இயற்கை அன்னை! அந்த நீர்த் தாயின் மடியிலே எத்தனை அமைதி கிடைக்கும் தெரியுமா? அவளது கூச்சலிலே நம் இறுதி மூச்சு... ஐயையோ!..."

அவள் வாய்விட்டு அலறினாள்—குமிழியிட்டுப் பாய்ந்த ஆற்றுநீர் பின்னணி இசைத்தது!

அந்தத் தாயின் கலங்கிய கண்களிலே ஒரு பயங்கரத் துணிவு! தன் அன்பு மகனின் கன்னத்திலே இறுதி முத்தம் கொடுத்தாள். கைகளைத் தூக்கினாள். ஆற்று வெள்ளத்திலே தன் அமுதமொழி மழலைச் செல்வத்தை...ஐயையோ! என்னவென்று சொல்வது? பெற்றவளின் மனம் இந்தப் பயங்கரத்திற்கு எப்படித் தான் துணிந்தது?

"ஐயையோ!...நில்...நில்...!"

உடனே அந்த ஏழைத் தாய்—பிச்சைக்காரி 'சடா'ரென்று திரும்பிப் பார்த்தாள்.

பாலத்தடியிலே 'சர்' என்று இரைந்து கொண்டு நின்றது அந்த மாடிவீட்டு மோட்டார் கார்!

"அடிப் பாவி! என்ன அக்கிரமமடி இது!" என்று அலறிக் கொண்டே காரிலிருந்து இறங்கினாள் அந்த மாளிகைக்கார அம்மா! பிச்சைக்காரியின் மேல் பாய்ந்தாள். அவள் கையிலிருந்த குழந்தையை 'வெடுக்' கென்று பிடுங்கினாள்.

விழித்துக் கொண்ட குழந்தை "அம்மா! அம்மா!" என்று அலறினான்.

தலைகுனிந்து நின்றாள் பிச்சைக்காரி. 'மாபெரும் தவறு செய்ய இருந்தேன்; மன்னித்து விடு என்னை!' என்று நீதியிடம் வேண்டுவதைப் போல இருந்தது அந்தத் தோற்றம்.

"பைத்தியக்காரி!...உன் மனம் எப்படிய்டி இரும்பானது?... உன்னால் வளர்க்க முடியவில்லை என்றால் யாரிடமாவது தந்து விடுவதுதானே! ...சொல்...உடனே சொல்...நானே எடுத்துச் செல்லுகிறேன்..."

பிச்சைக்காரி அந்த அம்மாவை ஏறிட்டு நோக்கினாள்.

மாளிகைக்கார அம்மா காரிலிருந்த தன் 'பர்ஸை' எடுத்தாள். அதிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து பிச்சைக்காரியின் கையில் வைத்தாள். குழந்தையுடன் காரில் ஏறி உட்கார்ந்தாள். கார் நகர்ந்தது.

கையிலிருந்த நூறுரூபாய் நோட்டையே வெறிக்கப் பார்த்தாள் பிச்சைக்காரி.

★

இது நடந்து நான்கு ஆண்டுகள் நகர்ந்து விட்டன.

மகனை இழந்த சோகம் அந்த ஏழைத் தாயை பெரிதும் வாட்டியது. சாலையோரத்திலே—சோலைவெளியிலே— ஏதேனும் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டால் அவளது பெற்றமனம் அலைமோதும்; நிலை குலையும்! என்ன செய்வாள் அவள்?

ஒரு நாள்...ஓடும் ரயில் ஒன்றில் காலணா காசுக்காக குரலெடுத்துக் கத்திக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போது ஒரு சிறுவன் "இந்தா பிச்சைக்காரி" என்று தன் மழலைக் குரலால் அழைத்தான். அவள் திரும்பி நோக்கினாள். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களுடன் ஒரு பணக்காரச் சிறுவன்; அவனுக்குப் பக்கத்திலே ஒரு அம்மா! அவள்... அவள்...பிச்சைக்காரி கூர்ந்து பார்த்தாள். அந்த அம்மா வேறு யாருமில்லை. அன்று அவளிடமிருந்து குழந்தையை வாங்கிச் சென்ற அதே சீமாட்டிதான்! அப்படியானால்... அந்தச் சிறுவன்...பிச்சைக்காரி ஓடிவந்தாள். சிறுவனின் கன்னத்திலே இருந்த மச்சம் ஒன்று 'நான் உன் மகன்தான்' என்று சொல்லியது. அவ்வளவுதான்; "மகனே" என்று பாய்ந்தாள்; அவனை கட்டித் தழுவி முத்தமிட்டாள். ஏதுமறியா சிறுவனும் திண்டாடினான்.

அப்போது "யாரடி இவள்? என்ன திமிர் உனக்கு..."—என்ற கூச்சல் கோபமாக எழுந்தது. பக்கத்திலிருந்த பணக்காரிதான் அப்படிச் சீறி விழுந்தாள்.

"அம்மா! என்னைத் தெரியவில்லையா? நான்தானேம்மா என் அன்புமகனை உங்களிடம் தந்தேன்"

"அது இருக்கட்டுமடி...இதோ பார்! உன் அழுக்கு ஆடை அவன் மேல் பட்டு, அவனது சில்க் உடையெல்லாம் அழுக்காகி விட்டது!... கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? பிச்சைக்கார கழுதை!...நீ இங்கே வாடா கண்ணே!..." என்றுசொல்லி அவனை தன் அருகில் அழைத்துக் கொண்டாள்.

"அம்மா! அம்மா!...அவன் என் மகன்தானேம்மா...ஒரே ஒரு..."

"சீ வாயை மூடு! 'என் மகன் என்மகன்' என்கிறாயே, உன் மகனா இவன்? என்றைக்கு என்னிடமிருந்து கை நீட்டி பணம் வாங்கினாயோ, அன்று முதலே இவன் என் மகன்...நினைவிருக்கட்டும்! முதலில் இந்த இடத்தை விட்டு ஓடு!..."

பிச்சைக்காரி விம்மி விம்மி அழுதாள்! இந்த உரையாடலை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டு நின்றான் சிறுவன்.

புகைவண்டி 'ஸ்டேஷ'னில் நின்றது. அந்த அம்மா சிறுவனுடன் கீழே இறங்கினாள். கார் காத்திருந்தது. புறப்பட்டு விட்டாள் வீடு நோக்கி.

ஆனால், அவமானப்படுத்தப்பட்ட ஏழைத்தாயின் மனம் பொருமிக் கொண்டு கிடந்ததை—கார் சென்ற பாதையிலே பின் தொடர்ந்து வந்ததை அவள் உணர்ந்தாளில்லை.

★

பொழுது விடிந்தது!

"கீச்...கீச்" என்ற குருவிகளின் சத்தம் கேட்டு விழித்தாள் மாளிகைக்கார அம்மா!

படுக்கைக்குப் பக்கத்திலேயே இருந்த பால் புட்டியை எடுத்துக் கொண்டாள். பக்கத்து அறையை நோக்கி நடந்தாள், "கண்ணு! கண்ணு! மணி ஆறாயிற்று—எழுந்திரம்மா" என்று சொல்லிக் கொண்டே!

அறைக்குள் நுழைந்தவள் மறுகணம் "ஐயோ" என்று அலறினாள்.

படுக்கை காலியாகக் கிடந்தது! அவளது அலறலைக் கேட்டு வேலையாட்கள் அத்தனை பேரும் ஓடி வந்தனர். அவனைத் தேடினார்கள். பலனில்லை.

அவனது படுக்கையிலிருந்து எதையோ அவசர அவசரமாக எடுத்த வேலைக்காரன், "அம்மா! அம்மா! இதோ பாருங்கள்!" என்றான்.

அம்மா அதை வாங்கினாள். பிரித்தாள். அது கசங்கிப் போய் கிழியக்கூடிய நிலையிலே இருந்த ஒரு நூறு ரூபாய் நோட்டு! அன்றொரு நாள் ஆற்றுப் பாலத்திலே குழந்தைக்கு விலையாக அவள் தந்தாளே, அதே நோட்டுதான்!

அவளுக்கு நடந்தது புரிந்து விட்டது.

"கீச் கீச்" என்ற குருவிக் குஞ்சுகளின் சப்தம் மரக்கிளை கூட்டிலிருந்து எழும்பியது. அலகில் ஏதோ இரையுடன் தாய்க் குருவி

...தாயுள்ளம் மாபெரும் சக்தி பெற்ற தாய்மையை ஒருபோதும் இழக்கச் சம்மதிக்காது...

பறந்து வருவதைக் கண்டு விட்டன அவைகள்!

மாளிகைக்கார அம்மாவின் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் உதிர்ந்தது!

"தாயுள்ளம் எதையும் இழக்கத் துணிகிறது. ஆனால் பெற்ற பாசத்தை!—மாபெரும் சக்தி பெற்ற தாய்மையை இழக்க ஒரு போதும் சம்மதிக்கவே சம்மதிக்காது! புரிகிறதா?" என்று சொல்லாமற் சொன்னது அந்தக் கண்ணீர்!

—சொர்ணம்.

கடைசிப் பக்கம்
'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்,

★ வே. ப. தருமன்,
சத்திரக்குடி.

அ. சண்முகம்; போளூர்.

(?) அண்மையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட்கட்சிமாநாட்டைப் படம் பிடித்த அரசாங்கத்துச் செய்தி இலாக்கா நமது மாநாட்டையும் படம் பிடிக்குமா?

நாம் என்ன, அசோக சக்கரத்தை உடம்பெல்லாம பச்சைகுத்திக் கொளகிற அளவுக்கு 'தடித்த தோலர்'களாகவா இருக்கிறோம்? அரசாங்கம் படமெடுப்பதற்கு!

(?) ஆத்மா என்பது என்ன?

அது ஒரு சியாங்கேக ஷேக்; சாவுக்குப் பிறகு மேலோகம் என்ற பார்மோசா தீவுக்குள் பதுங்கிக் கொள்ளும்— என்று புராணிகர்கள் சொல்கிறார்கள்!

(★) வே. ப. தருமன்; சத்திரக்குடி.

(?) உமது கட்சிக்குக் கண்கள் எது?

எம் வீரர்கள் பெற்றிருக்கும் விழுப் புண்கள்!

(?) உறக்கமில்லாத உலகம் எது?

திருச்சியைப் போய்ப் பாருங்கள்; வள்ளுவர் நகர் நிர்மாணிக்க எம் பாசறை வீரர்கள் உறக்கம் மறந்து உழைக்கிறார்கள்!

மு. பழனிச்சாமி; கூமாப்பட்டி.

(? உலகத்திலேயே மலிவான சரக்கு எது?

காமராசரின் கைச் சரக்கு!

எம். ஆர். நாதன்; சென்னை-1.

(?) உலக உத்தமர் காந்தியார் இப்போது உயிரோடு வந்தால் காங்கிரஸ் கட்சியின் நிலைமை எப்படியிருக்கும்?

மனைவி விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது-கணவன் புகுந்த கதையாக இருக்கும்!

வெள்ளிக்கிழமை...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

விடை பெற்றுக் கொள்ள விரும்பினார்.

அவளோ, சிறிது நேரத்திற்கு முன்தான் விழித்து... மீண்டும் கண் மூடி அயர்ந்திருக்கிறாள். அதனால் மகளிடம் எதுவும் பேசாமல் — மாலையிலே வருவதாக டாக்டரிடம் கூறிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டனர். அவர்கள் போன சற்று நேரத்திற் கெல்லாம் டைகர் மருத்துவ மனைக்கு வேகமுடன் வந்து சேர்ந்தான். அவனிடம் ஆனந்தி, சிந்தாமணியின் விபத்து குறித்து சொன்னாள். டைகரும், வேம்புவும் சிந்தாமணி கண்மூடியபடி கண்ணயர்ந்திருக்கும் கட்டில் பக்கம் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பினார்கள். டைகரின் கண்களிலே ஒரு புது வித மான சுழற்சி! நெற்றியிலே நீண்ட ஆழமான பயங்கரம் நிறைந்த சுருக்கங்கள்!

"ஆனந்தி! கொஞ்சம் உன்னிடம் தனியாகப் பேச வேண்டும் இப்படி வாயேன்!" என்று அவளை அழைத்துக் கொண்டு ஒரு அறைப் பக்கம் சென்றான் டைகர்! (தொடரும்.)

சென்னை

6—5—56 ஞாயிறுமாலை 5 மணிக்கு திருவல்லிக்கேணி சுரப்ப முதலி தெருவில் நடைபெறும் பாண்டியன் படிப்பக மூன்றும் ஆண்டு நிறைவு விழாவில், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் கவிஞர் கண்ணதாசன் தோழர்கள் சொர்ணம் எம். கே. மணி, சாரதி ஆகியோர் பேசுவர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவருமான மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட் ரோடு, சென்னை-6